ஊழியத்தின் பாதையிலே

சாம் ஜெபத்துரை வெளியீடு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஊழியத்தின் பாதையில்!
(IN THE PATH OF HIS MINISTRY)

Mrs. ஜாஸ்மின் பால்ராஜ்

வெளியிடுபவர்:
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : டிசம்பர் 1992
இரண்டாம் பதிப்பு : மார்ச் 1995
நன்கொடை ரூ. 10/-
வெளியீடு எண் : 288

அச்சிட்டோர்:-
ஓரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

அறிமுக உரை

சகோதரி ஜாஸ்மின் பால்ராஜ் அவர்கள் எழுதிய "ஊழியத்தின் பாதையிலே" என்ற புத்தகத்தை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நிச்சயமாகவே இந்தப் புத்தகம் உங்களுக்கு ஆசீர்வாதமாய் அமையும்.

சகோதரி அவர்கள் பல பத்திரிக்கைகளில் எழுதிய கட்டுரைகளை எல்லாம் வாசித்தேன். அவைகள் எளிய நடையில் உள்ளத்தைத் தொடும் விதத்தில் அமைந்திருக்கிறதைக் கண்டேன். அவர்களுடைய கட்டுரையை வெளியிட வேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டானது. அதை புத்தகமாக வெளியிட உரிமைத்தாருங்கள் என்று கேட்டேன். அவர்கள் மிக அன்போடுகூட அனுமதி வழங்கினார்கள்.

வரப்போகிற நாளில் அவர்களுடைய ஏராளமான புத்தகங்களை வெளியிட இருக்கிறோம். இதற்காய் ஜெபியுங்கள். இந்த புத்தகத்தை வெளியிட அனுமதிக் கொடுத்த சகோதரி அவர்களுக்கு எங்களுடைய நன்றியையும் அன்பையும் தெரிவிக்கிறோம். கர்த்தர் அவர்களையும், அவர்களுடைய குடும்பத்தாரையும் ஊழியத்தையும் ஆசீர்வதிப்பாராக.

J. சாம் ஜெபத்துரை

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	அப்போஸ்தலனாகிய தோமா!	5
2.	ராபர்ட் டி. நோபிளி!	9
3.	ரேனியஸ்!	13
4.	பிரான்சிஸ் சேவியர்!	17
5.	பிரடரிக் சுவாட்ஸ்!	21
6.	டாம்லின்சன்!	25
7.	சீகன்பால்க்!	30
8.	வில்லியம் நிங்கல் தௌபே!	34
9.	ராக்லண்ட்!	39
10.	வில்லியம் கேரி!	43
11.	வீரமாமுனிவர்!	48
12.	பேராயர் அசரியா!	51

அப்போஸ்தலனாகிய தோமா!

(முதல் மிஷனெரி)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களை மூன்று குழுவாகப் பிரித்திருக்கிறார்கள். முதல் குழுவில் உள்ள நால்வரும் இயேசுவோடு அதிக தொடர்புடையவர். தோமா இரண்டாவது வட்டத்தில் வருபவர்.

தோமா என்பதற்கு இரட்டைப் பிள்ளைகளிலொன்று என்பது பொருள் (one of the twins) அதற்கு கிரேக்க மொழியில் உபயோகமாகும் வார்த்தை திதிமு. அதனால் தான் யோவான் தன் நற்செய்தி நூலில் திதிமு என்று (யோவான் 11:16,20:24,21:2) குறிப்பிடுகிறார். ஆனால் இரண்டில் அடுத்த நபர் யார் என்று சொல்வதற்கில்லை.

திருமறையில், நாம் தோமாவை அதிக துணிச்சலும் (யோவான் 11:16) தைரியமும் உள்ளவராக காண்கிறோம். ஆண்டவருக்காக உயிரைக் கொடுக்க ஆயத்தமாக இருந்தார். தோமா மனம் திறந்து சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் சுபாவம் உள்ளவர் (யோ 14:5). மற்ற சீஷர்கள் கேள்வி எழுப்பாவிட்டாலும் இவர் ''வழியை எப்படி அறிவோம்'' என்று கேட்கிறார்.

கடைசியாக எதையும் நேரில் கண்டால்தான் நம்பக்கூடியவர் என்பதனை யோவான் 20-ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். சந்தேகம் நிவர்த்தியானதும், ''என் ஆண்டவரே, என் தேவனே'' என்று அவர் அளித்த பதில் யோவான் நற்செய்தி நூலையே உச்சக் கட்டத்திற்கு கொண்டு செல்கிறது.

இந்தியாவிற்கு முதன் முதல் நற்செய்தியை கொண்டு வந்தது அப்போஸ்தலனாகிய தோமா. இதற்கு பல ஆதா

ரங்கள் உண்டு. அவர் இந்தியாவிற்கு வந்த விதம் பற்றி பல பாரம்பரிய கதைகளும் உண்டு. அதில் முக்கியமான ஒன்றை நாம் "தோமாவின் நடபடிகள்" (The acts of Thomas) என்ற புத்தகத்தின் வாயிலாக அறிகின்றோம்.

அப்போஸ்தலர் யாவரும் கூடி, யார், யார் உலகில் எந்த எந்த பாகத்திற்கு போக வேண்டுமென்று சீட்டுப் போட்டார்களாம். தோமாவின் பெயருக்கு இந்தியா தேசம் விழுந்ததாம், அவ்வளவு தூரம் செல்ல மறுப்பு தெரிவித்தாராம். அந்த தருணத்தில் இந்தியாவிலிருந்து குண்டபோரஸ் மன்னனின் பணியாள் அப்பீனிஸ் எருசலேமிலிருந்து ஒரு நல்ல தச்சனை இந்தியாவிற்கு கொண்டு வரும்படி உத்தரவு பெற்று வந்தார். இயேசுவே மனித ரூபத்தில் வந்து அப்பனீஸிடம் தன் அடிமை ஒருவன் நல்ல தச்சன் என்று சொல்லி அவனை அப்பீனிஸிக்கு விற்றுவிடுவதாக பேசி, அதற்கு வேண்டிய பத்திரங்கள் எல்லாம் எழுதி, இயேசு என்று கையொப்பமிட்டு தோமாவின் விலாசம் கொடுத்து அப்பீனிஸை அனுப்பினாராம். அதைப் பார்த்த தோமா அதை புரிந்துகொண்டவராய், மனம் வருந்தி இந்தியாவிற்குப் புறப்பட்டார்.

வட இந்தியாவில் குண்டபோரஸ் மன்னன் தோமாவை வரவேற்று தனக்கு ஒரு மாளிகை கட்டும் பொறுப்பை அவரிடம் கொடுத்து அவரிடம் கொஞ்சம் பணமும் கொடுத்தாராம். தோமாவோ அந்தப் பணததை ஏழைகளுக்கு கொடுத்தாரம். முடிவில் மன்னன் மாளிகை பற்றி விசாரிக்க அது தற்சமயம் பார்க்கமுடியாது. மன்னன் மரித்தபின் காணலாம் என்றாராம்.

அரசன் வெகுண்டு தோமாவை கொல்ல நினைக்க, பின் கனவு ஒன்றின் மூலம் எச்சரிக்கப்பட்டு மனம்மாறி, தானும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாராம். குண்டபோரஸ் மன்னனின் நாணயங்கள் சிந்து, சிந்து, ஆப்கானிஸ்தானம் முதலிய இடங்களில் கிடைத்தனவாம். கதை

கள் எப்படி இருந்தாலும் தோமா முதல் நூற்றுண்டில் இந்தியாவிற்கு வந்தார் என்பதற்கு சான்றுகள் பல உள்ளன.

தோமா இந்தியாவிற்கு வந்தபோது அதாவது முதல் நூற்றுண்டில் ஒரு யூத சமுதாயம், மலபாரைச் சேர்ந்த கோடங்கலூரிலிருந்தது வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவிற்கு வந்த தோமா அங்கு தம் ஊழியத்தை ஆரம்பித்தார். அங்கு நாற்பது யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். கி.பி. 52 ல் பாடப்பட்ட பாட்டு களில் சில பிற்காலத்தில் கிடைத்தன. அதற்கு ஆதாரங் கள் சிரியர் பத்திரங்களில் (Syrian document-doctrine of apostles) காட்டப்பட்டுள்ளது. அவை கி பி 250 இல் எழுதப்பட்டன.

மேலும் ஆரும் நூற்றுண்டில் எழுத்தாளர் தியோட ரும், ஏழாம் நூற்றுண்டில் பூகோள சாஸ்திர வல்லுனரும் சரித்திர ஆசிரியருமான ஸ்டிரபோ என்பவரும், பதின் மூன்றும் நூற்றுண்டில் மார்க்கோபோலோவும் தோமா இந்தியாவில் முதல் நூற்றுண்டில் இருந்ததற்கு ஆதாரம் காட்டுகிறுர்கள். மேலும் இந்தியாவிலிருந்து தோமா எழுதிய கடிதங்கள் தாய் சபையில் நிருபங்களுடன் வாசிக் கப்பட்டன. அதை சிரியாக் டிடார்கலியா கூறுகிறது.

ஜான்கிரிசோஸ்டம் என்பவர் (கி. பி 340-407) தோமாவின் கல்லறை அதிக மரியாதையுடன் இந்தியா வில் காப்பாற்றப்பட்டு வருகிறது என்று எழுதுகிறுர். கிரகிரி (கி. பி. 844-895) தோமாவின் கல்லறை அருகில் ஆலயமொன்று கட்டப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறுர்.

முதல் நூற்றுண்டில் எப்படி கடல் கடந்து இவ்வளவு தூரம் வந்திருக்கக்கூடும் என்பது அர்த்தமற்ற பேச்சு! கி.மு. 1000 ஆண்டிலேயே, சாலமோன் மன்னன் காலத் தில் இந்தியாவுடன் வியாபாரம் இருந்ததை 11 நாளா 9:21 இல் காணலாம். தர்ஷீசின் கப்பல்கள் இந்தியாவி

லிருந்து குரங்கும், மயில்களும் கொண்டு சென்றன. ஸ்டிரபோ, ''சிவந்த கடல் மார்க்கம்'' என்ற அவர் புத்தகத்தில் மத்திய தரைக்கடல் பிரதேசத்திற்கும் இந்தியாவிற்கும் வியாபாரம் நடந்ததென்கிறுர். எபிரேய பதமாகிய 'கோபி' (குரங்கு) தோகி (மயில்) தமிழ் வார்த்தைக் கலப்புள்ளது. எபிரேய அகராதிகளும் மலபார் வார்த்தைகள் என்று கூறுகின்றன.

தோமா இந்தியாவிற்கு வந்து, மொழி கற்று நற்செய்தி பிரசங்கித்து கிறிஸ்தவ சபையை ஆரம்பித்தார். முடிவாக, சென்னை பட்டணத்தில் சில மதகுருக்களின் பொருமையால் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டார், அவர் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார். அவர் உடல் மைலாப்பூரில் அடக்கம் பண்ணப்பட்டது. பின் சிரியா வியாபாரிகள் எடிசாவிற்கு (Edesa) சில பாகத்தை கொண்டு சென்றுர்கள் என்றும் கூறப்படுகிறது.

தோமா ஒரு காரியத்தை திட்டமாகத் தெரிந்தபின் அதை செய்து முடிக்க, மரணமே நேரிடினும் தயங்க மாட்டார். அதை தம் வாழ்க்கையில் அவர் நமக்கு விளக்கிவிட்டார்.

வில்லியம் பார்க்கிளே சொல்லுவது போல் "A faith like Thomas is better than any glio profession; and an obedience like this is better than an easy acquisence which agrees to a thing without counting the cost and then goes back upon its word.

நம் விசுவாசமும், கீழ்ப்படிதலும் எப்படி இருக்கிறது? நம்மை நாமே ஆராய்வோம்.

ராபர்ட்டி. நோபிளி!

ஐரோப்பாவிலிருந்து 'ஜெசுட்' (Jesuit) என்ற பிரிவைச் சார்ந்த மிஷனெரிமார்கள் அநேகர் இந்தியாவிற்கு தொடர்ந்து வந்திறங்கினர். இந்தியாவில் ஒரு பெரும் மதப்புரட்சியை எதிர் நோக்கினர். கோவாவிலுள்ள புனித பவுல் கல்லூரிக்கு இந்திய சக்ரவர்த்தி அக்பர் (1542-1605) ஒரு சேவகன் மூலமாக கடிதம் ஒன்று அனுப்பினுர். அநேக மக்கள் மதம் மாறுவதை அறிந்த சக்ரவர்த்தி கிறிஸ்தவ மதம் பற்றி அறிய ஆவல் தெரிவித்திருந்தார். கடிதம் ஒரு பெரும் ப்ரபரப்பை உண்டாக்கியது. இந்தியா முழுவதும் கிறிஸ்தவ மதத்தினை தழுவ அரிய சந்தர்ப்பம் என்று எண்ணினுர்.

அரசன் விருப்பப்படி ஜெசுட் மிஷனெரிகள் சக்ரவர்த்தியிடம் அனுப்பப்பட்டனர். சக்ரவர்த்தியை சந்தித்துப் பேசிய மிஷனெரிகள் சிறிது காலத்தில் மன்னனின் ஆர்வம் ஆழமற்றது என்பதை அறிந்தனர். மன்னனின் 'தின் இலாகி' கொள்கைகள் அதை வலியுறுத்தியது. ஆகையால் மனம் உடைந்து மிஷனெரிகள் கோவா திரும்பினர். இந்த வேளையில் ராபர்ட் டி நோபிளி இந்தியாவிற்கு இத்தாலி தேசத்திலிருந்து (கி.பி 1605) வந்து சேர்ந்தார்.

(கி.பி 1605) நாயக்கர் மன்னனின் தலைநகராகிய மதுரையில் இவர் தம் ஊழியத்தை ஆரம்பித்தார். அங்கே இந்து மத சாஸ்திரங்களும், தத்துவ ஞானமும், கலையும் அதிகமாக ஆராயப்பட்டு ஆழமாக வேரும் ஊன்றி இருப்பதை அவர் கண்டார். இந்துக்களுக்கும் கிறிஸ்தவருக்கும் மத்தியில் இருக்கும் பெரும் பிளவை அவர் அறிந்தார். உயர் குல மக்கள் கிறிஸ்தவ மதத்தில் சேரவில்லை. கிறிஸ்தவரானவர் அனைவரும் தாழ்த்தப்பட்ட குலத்தில் உள்ளவர் என்பதை நன்கு உணர்ந்தார். ஆகையால் முற்றிலும்

மாறுபட்ட முறையை கையாள வேண்டுமென்று முடிவு செய்தார்.

கிறிஸ்தவ மதமென்றால் "பரங்கியர்" (போர்ச்சுக்கல் மக்களை குறிக்கும் பதம்) மதம் என்று இந்திய மக்கள் நினைத்தனர். மாமிசம் உண்பதும், குடியும், வெறியும் உள்ள மக்கள் அவர்கள், அவர்களோடு எந்த தொடர்பும் கொள்வதே தப்பு என்று கருதினர். இந்த எண்ணத்தை முற்றிலும் மாற்றி, உயர்குல மக்களிடம் தொடர்பு கொண்டு இருந்தால்தான் வேலை செய்ய முடியுமென முடிவு செய்தார்.

ராபர்ட் தனக்கு ஒரு பிராமண சமையற்காரனை அமர்த்தினார். சைவ உணவு உண்டார். தன் கறுப்பு அங்கியை கழற்றி காவி உடை அணிந்தார். காலில் கட்டை செருப்பை மாட்டினார். ஒரு துறவிபோல் காணப் பட்டார். சமஸ்கிருதமும் நன்கு கற்று மத சம்பந்தமான காரியங்களில் மக்களோடு கலந்து ஆராய்ச்சி நடத்தினர்.

ராபர்டின் முயற்சிகள் பயனுள்ளதாக இருந்தது. சில ஆண்டுகளில் அறுபத்து மூன்று பேர் கிறிஸ்தவ மதத்தை தழுவினர். அவர்களில் நாயக்கர், பிராமண குலத்தை சேர்ந்தவர், விவசாயிகள், வியாபாரிகள் இருந்தனர். விக்கிரக ஆராதனையை தவிர்த்து, ஆனால் மற்றப்படி குடும்பத்திலிருந்து, ஜாதியை விடாமலும், உடை, உணவு மாற்றாமலும், குடுமி உள்ளவர் அதனை எடுக்காமலும் கிறிஸ்தவ மதத்தினை சேர்ந்தனர். பரம்பரையாக கைக் கொண்டு வந்த இந்திய கலாச்சாரங்களை அவர்கள் கைவிடத் தேவை இல்லை என்பதே ராபர்டின் எண்ணம்.

அவர்கள் விருப்பப்படியே பிராமணரின் அச்சு அடை யாளமாகிய பூநூலை கிறிஸ்தவ ஜெபத்துடன் அணிந் தனர். பொங்கல் பண்டிகை ஜெபத்துடன் கொண்டாடப் பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களுடன் அவர் கலந்து

வசிக்கவில்லை. சம்பந்தம் வைக்கவும் இல்லை. ஜாதி வேற்றுமை இந்தியரிடமிருந்து பிரிக்க முடியாது என்று அவர் அதை வற்புறுத்தவில்லை. அநேக புற மதத்தினர் ராபர்டை நெருங்கி வந்தனர். அவருடைய அனுசரித்துப் போகும் கொள்கை பலர் மனதைக் கவர்ந்தது.

இந்து பழக்க வழக்கங்களை கிறிஸ்தவ மதத்தினுள் புகுத்தி விட்டார் ராபர்ட் என்று குற்றம் சாட்டப் பட்டார். அது ரோமாபுரியில் உள்ள தலைவர் வரை சென்றது. கி. பி. 1619 இல் கூட்டம் ஒன்று கூடி விசாரணை நடத்தப்பட்டது. ராபர்ட்டின் அனுசரித்துப் போகும் (accomadation) வழிகள் பல தர்க்கத்திற்கு வந்தன, முடிவில் ராபர்ட் வெற்றி கண்டார்.

இந்திய சூழ்நிலையில் அது சரி என்று தீர்மானிக்கப் பட்டது. தொடர்ந்து தன் கொள்கையின்படி வேலை நடத்தினர். அநேகர் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டனர். மதுரையை சுற்றி மட்டுமல்ல, திருச்சி சேலம், மாரமங்கலம் எல்லாப் பகுதிகளிலும் கிறிஸ்தவ மதம் பரவியது. கி. பி. 1656 இல் அவர் சந்தோஷமாக மரணம் அடைந்தார்.

ராபர்ட் எவ்வளவாக தம்மைத் தாழ்த்தி, இந்திய முறைகளையும், மொழியும் கற்று தன்னை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தினர். அதன்பின் அவர்களிடம் தர்க்கம் நடத்தினர். புறமதத்தினரின் கருத்துக்களையும், தத்துவ ஞானங்களையும் நாம் அறிய முயற்சிக்கின்றோமா? அறியாமல் ஒரே அடியாக கல், மண், பேய் என்றால் நாம் அவர்களை அணுக முடியுமா? நம் அக்கம் பக்க மக்களிடம் நாம் எப்படிப் பழகி அவர்களின் மனதைக் கவர்கின்றோம்? அந்நிய நாட்டு மதம் என்று காட்டுகின்றோமா?

ராபர்ட், ஒரு நாட்டின் பண்பாடுகளுக்கும், கலாச்சாரங்களுக்கும் குறுக்கே மதம் நிற்கக் கூடாது என்றார். இக்காலத்தில் நாம் சொல்வதில்லையா 'Indianisation,

என்று இந்தியப் பாணியில் வழிபாடுகள் நடத்துவதும், ஆலயங்கள் கட்டுவதுமில்லையா? குற்றம் கண்டு பிடிக்கின்றோமா? நம்மிடத்தில் ஜாதி வேறுபாடு இல்லையா?

இதில் கருத்து வேறுபடலாம். ஆனால் ராபர்ட் அவர்கள் ஆத்துமாக்கள் பேரில் தாகமுள்ளவராக அப்படிச் செய்தார், நமக்கு தாகமுண்டா?

அத்தியாயம் 3

ரேனியஸ்!

ரேனியஸ், பிரஷ்யா தேசத்தை சேர்ந்தவர். அவர் தந்தை அந்நாட்டு பட்டாளத்தில் ஒரு பெயர் பெற்ற வீரனாகவும், தலைவனாகவும் விளங்கினார். ரேனியஸ் தம் தந்தையை அதிகம் நேசித்தார். ஆனால் ரேனியஸ் சிறுவனாக இருக்கும்போதே தந்தை மரித்தார். வீரனான தந்தையின் மரணம் சிறுவனை வேதனைக் கடலில் ஆழ்த்தியது. உலகம் மாயையானது என்பதனை உணர்ந்தார்.

அவர் உள்ளம் நித்திய வாழ்வை அளிக்கும் கிறிஸ்துவை நாடியது. பக்தியில் வளர்ந்தார். தன் இருபத்திரெண்டாம் வயதில் கிறிஸ்தவ மிஷனெரி சங்கத்தில் சேர்ந்தார். ரேனியஸ் தம் பணியை தன் நாட்டில் முதலில் ஆரம்பித்தார். அடுத்த ஆண்டு இங்கிலாந்து வந்து சேர்ந்தார். அங்கிருந்து அந்த சங்கத்தின் மூலமாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்.

சென்னை வந்து சேர்ந்த அவர் முதலில் தமிழ் மொழியை ஆர்வத்தோடு கற்றார். ஐந்து ஆண்டுகள் சென்று அவரை பாளையங்கோட்டைக்கு அனுப்பினார்கள். திருநெல்வேலி மாவட்டம் வந்தது அவர் தமிழறிவை வளர்த்தது. அங்குள்ள கவிராயர் திருப்பாற்கடல் நாதனிடம் நன்னூல் முதலான இலக்கணத்தை நன்கு கற்று யாவரும் அதிசயிக்கத்தக்கதாக செந்தமிழில் பேசும் வல்லமை கொண்டார். பிற மதத்தவரும் அவர் பேசுவதை ஆவலாக விரும்பி கேட்டனர். அவரும் பல இடங்களில் பல சொற்பொழிவுகள் ஆற்றினார்.

கிறிஸ்தவ பணியில் ஈடுபாடு உள்ளவர் பேசும் போதும், எழுதும்போதும் இலக்கணத் தவறுகள் இல்லாமல் இருக்கவேண்டுமென்று எண்ணி ரேனியஸ் அவர்கள்

நன்னூல் படிப்பது பலருக்கு சிரமமாக இருந்ததால் யாவருக்கும் எளிதாக விளங்கத்தக்கதாக ஒரு இலக்கண புத்தகம் வெளியிட்டார். அது எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்று மூன்று பகுதிகளை உடையதாக அமைத்தார்.

இன்னும் அநேக நூல்கள் அவர் எழுதி வெளியிட்டார். அதிகம் பாராட்டு பெற்றது அவரின் ''வேத உதாரணத் திரட்டு'' (Evidence of Christianity) மதசம்பந்தமான புத்தகங்கள் தவிர சரித்திர புத்தகங்கள், பூகோள சாஸ்திர புத்தகங்கள், இயற்கை சம்பந்தமான புத்தகங்கள் பல எழுதினார். அவர் எழுதிய நூல்கள் எளிய, இனிய, தெளிந்த நடையில் எழுதப்பட்டதுமல்லாமல் அவரின் உயர்ந்த கருத்துக்களை உள்ளத்தில் பதிப்புதாகவும் இருந்தன.

எழுதும் பணி மட்டுமல்ல, அவர் வேலை, நற்செய்தி பரப்ப ஏதுவான கட்டிட வேலைகளிலும் அதிக ஆர்வம் காட்டினார். பாளையங்கோட்டையில் உள்ள திருத்துவ ஆலயம் (Trinity Church) இவரின் முயற்சியால் கி பி 1826 இல் கட்டப்பட்டது புறமதத்தவரும் இவர் மேல் கொண்டிருந்த நல்ல எண்ணத்தால் ஆலயம் கட்டும் பணியில் இவருக்கு பெரும் பொருளுதவி செய்தனர். அங்கிருந்த வெங்கு முதலியார் என்னும் செல்வந்தர் நன்கொடை பல வழங்கினார் ஆலய கட்டிட வேலைக்கு!

அனாதை பிள்ளைகளுக்கு ஆதரவாக இருக்கும் டோனாவூரை உருவாக்கின பெருமை ரேனியஸ் அவர்களையே சார்ந்தது. அப்பகுதியுள்ள காலி இடங்களை விலைக்கு வாங்கி கி.பி 1827 இல் கிறிஸ்தவ மக்களை அங்கு குடியேற்றினார். தன் சொந்த நாட்டை சேர்ந்த டோனா என்னும் தனவந்தர் அதை வாங்குவதற்கு பெரிய தொகையை நன்கொடையாகக் கொடுத்ததால் அவர் பெயரையே அதற்கு டோனாவூர் என்று அழைத்தார்.

தமிழ்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வமுள்ளவராக, அவர்கள் படிப்பில் ஊக்கம் அளிப்ப தற்காக முப்பத்தாறு மாணவிகளோடு ஒரு பள்ளியை ஆரம்பித்து வைத்தார். அது இந்நாள் சிறப்பான பெண்கள் கல்லூரியாக விளங்குகிறது.

சென்னை வேதாகம சங்கத்தார் வேதாகமப் புதுத் திருத்தலை விரும்பி அப்பணிக்கு தகுந்தவர் ரேனியஸ் அவர்கள்தான் என்று அந்த வேலையை அவரிடம் ஒப்புவித்தனர். அதை அவர் ஆராய்ச்சையில் அதை திருத்தி எழுதுவதைவிட புதிய திருப்புதல் செய்தலே மேல் என்று எண்ணி, திருமறைக் கருத்துக்களை யாவரும் அறியும் விதமாக எழுதப்படவேண்டுமென்று ஆர்வத்தோடு செயல்பட்டார். சில ஆண்டுகள் கடுமையாக உழைத்து புதிய ஏற்பாட்டை முடித்தார். ஆனால் எதிர்பாராத விதமாக வேதாகம சங்கத்தார் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

ரேனியஸ் அவர்கள் தாம் எடுத்துக்கொண்ட கொள்கையிலிருந்து மாறுபவர் அல்ல. இறையியலிலும் அவருக்கும் மிஷனெரி சங்கத்திற்கும் சில கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் சங்கத்தைவிட்டு வெளிவந்து யார் உதவியும் எதிர்பாராமல் தன் ஊழியத்தை நடத்தினார். பலர் தாமாகவே அவர் பணிக்கு பண உதவி செய்தனர்.

அநேக ஏழை மக்களுக்கும் ஆதரவாகவும் இருந்தார். ஆனால் கிறிஸ்தவ மிஷனெரி சங்கத்தை விட்டதால் மக்கள் மத்தியிலும் பிரிவினை உண்டாயிற்று. இது ரேனியஸ் அவர்களுக்கு பெரும் மனநோயாகிவிட்டது. அவர் ஒற்றுமைக்கு முயன்றும் முடியவில்லை. அதனால் அவர் மனநோய் உடலை தாக்கினது. அவர் நோயுற்றார். தன் நாற்பத்தெட்டாம் வயதில் அவர் இந்த உலகை நீத்தார். அவரின் உண்மையான சேவையை நன்கு அறிந்த மக்கள் கண்ணீர் வடித்தனர்.

பிரஷியா தேசத்தில் பிறந்து வளர்ந்து இங்கு தமிழர் மத்தியில் வந்து அவர்கள் நலனுக்காக வசித்து, அவர் மொழியை இலக்கணத்தோடு கற்று பல நூல்கள் எழுதி, திருமறையையும் பிழையின்றி திருத்தி அமைத்து ஓயாது உழைத்து, ஆலயம் பல நிறுவி, கிறிஸ்தவ மக்கள் மத்தியில் ஒற்றுமை நிலவப்பாடுபட்டு அதில் தன் உயிரையும் விட்டார். என்ன அவர் பண்பும் சேவையும்! அவர் இன்றும் சிறந்த தமிழ் தொண்டராகக் கருதப்படுகின்றார்.

பேசினாலும், எழுதினாலும், வாசித்தாலும் தொண்டு செய்தாலும் அவற்றை திருத்தமாக, பிழையின்றி செம்மையாக செய்யவேண்டும் என்பதுதான் அவர் குறிக்கோள். நாம் அந்த நோக்கத்தோடு எதையும் செய்கின்றோமா அல்லது ஏனோ, தானோ என்று செய்கின்றோமா? எத்தனையோ தமிழருக்கு, தமிழ் தாய்மொழி செவ்வையாக தெரியாமலிருப்பது வெட்கத்தை தரும் காரியமல்லவா? அந்நிய நாட்டவர் சுத்த தமிழ் பேசும் தருணம் தமிழர் ஆங்கிலத்தில் பேசி, அதற்கு மொழி பெயர்ப்பாளர் வைப்பது வேடிக்கை அல்லவா?

இந்தியாவில் பல ஆண்டுகள் இருந்து தற்சமயம் அமெரிக்காவிலிருக்கும் ஒரு அமெரிக்க குடும்பத்தினர் தங்கள் வீட்டில் ஒரு நேரம் தமிழிலும் ஒரு நேரம் ஆங்கிலத்திலும, காலை மாலை குடும்ப ஜெபம் செய்கின்றனர். ஆனால் தமிழரோ தமிழ் பேசவும் வெட்கப்படுகின்றனர். ஆனால் ரேனியஸ் அவர்கள் வாழ்க்கையில் செய்வதை திருந்தச் செய்யவேண்டும் என்பதே நாம் படிக்கும் பாடம்.

பிரான்சிஸ் சேவியர்!

பதினாறும் நூற்றாண்டில் இந்திய தேசத்தின் மேற்கு பகுதியில் போர்ச்சுக்கல் தேசத்தார் உறுதியாக தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். மாலுமிகளும், சிப்பாய்களும், வியாபாரிகளும் அதே நேரத்தில் ஆயர்களும் வந்து இறங்கினர். கோவாவில் ஒரு சபையை ஆரம்பிப்பதற்காக ஆலயங்களும் நிறுவனங்களும் கட்டப்பட்டன. வியாபாரம் மட்டும் அவர்கள் நோக்கமல்ல. அதோடு சேர்த்துக் கிறிஸ்தவ மதத்தையும் பரப்ப ஆசித்தனர். ஆயர்கள் இந்தியாவிற்கு வந்த போர்ச்சுக்கல் மக்களுக்காகவும் இநதியருக்கு நற்செய்தி கூறவும் வந்திறங்கினர்.

அரசாங்கம் சில முறைகளை கையாடினது இந்தியப் பெண்களை போர்ச்சுக்கல் வாலிபருக்கு மணம் முடித்தனர். அவர்களுக்கு முதலாவதாக திருமுழுக்கு கொடுத்தனர். போர்ச்சுக்கல் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் மசூதிகளும். இந்து ஆலயங்களும் அழிக்கப்பட்டன. பொதுவான அலுவலகங்களில் வேலைக்கு கிறிஸ்தவரே தெரிந்தெடுக்கப்பட்டனர். கிறிஸ்தவருக்கு ஆதரவும், பாதுகாப்பும் அளிக்கப்பட்டதால், முத்து சிப்பி குளிக்கும் மீனவர் இருபதினாயிரம் மக்கள் திருமுழுக்கு பெற்றனர்.

மக்கள் கூட்டம் கூட்டமாக கிறிஸ்தவ மதத்தை தழுவினாலும் அவர்கள் ஆர்வம், விசுவாசம், வாழ்க்கை அனைத்தும் திருப்திகரமானதாக இல்லை. இதனை அறிய வந்த போர்க்சுக்கல் மன்னன் மூன்றும் யோவான் (John III) போப்பிடம் முறையிட்டு புதிதாக உருவான இயேசுவின் சங்கத்திலிருந்து (Society of Jesus) ஆயர்களை இந்தியாவிற்கு அனுப்பக் கேட்டார். அந்த வேண்டுகோளுக்கு இணங்கி முதலாவதாக தெரிந்தெடுக்கப்பட்டவர்தான் பிரான்சிஸ் சேவியர்.

பிரான்சிஸ் சேவியர் ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்தவர். பாரிசில் படிக்கும் தருணம் இக்னெசியஸ் லயோலா என்பவரின் தூண்டுதலால், இன்னும் இருவரையும் சேர்த்து ஒரு சிறு குழுவாக சில வாக்குறுதிகளை ஒரு ஆலயத்தில் எடுத்தனர். அதன்படி திருமணம் செய்யாமல், எளிமையான வாழ்க்கையை தெரிந்து எடுத்து தங்களை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தனர்.

உலகத்தின் எந்த பாகத்திற்கும் நற்செய்தி பணிக்காக போப் அனுப்பினால் போக ஆயத்தப்பட்டனர். ரோமாபுரிக்குச் சென்று போப்பிடம் தங்கள் கொள்கைகளை எடுத்துக் கூற, அவரும் கலந்து பேசி, இந்தியாவிற்கு பிரான்சிஸை அனுப்பினார். அரசனின் ஆதரவோடு கி.பி. 1541 லிஸ்பனிலிருந்து போப்பின் சிறப்புத்தூதராக (Special messenger of the Pope to India) இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்.

இந்திய மண்ணில் மிதித்தவுடனேயே பிரான்சிஸ் கோவாவின் பேராயரைக் கண்டு மரியாதை செலுத்தி பின் தன் ஊழியத்தில் ஈடுபட்டார். மருத்துவமனைகளுக்கும், சிறைக்கூடங்களுக்கும் சென்று மக்களை சந்தித்தார். ஆலயத்தில் சிறுபிள்ளைகள் அனைவரையும் கூட்டி அவர்களுக்கு போதனை செய்தார். பிரான்சிஸ் ஒரு புது முறையைக் கையாண்டார்.

தெருக்களில் 'கிணிங் கிணிங்' என்ற ஒரு மணியை அடித்துச் சென்றார். அது மக்கள் கவனத்தைக் கவர! பெரியவர் கூடினால் தங்கள் குழந்தைகளையும், வேலைக்கார ரையும் ஆலயத்திற்கு அனுப்பும்படி கேட்பார். அவர்களுக்கு செய்யுள்போல் எழுதி வைத்திருந்த செய்திகளை பாடுவார். சிறுவரையும் பாட வைப்பார். ஐந்து மாதங்கள் கோவாவில் ஊழியம் செய்து, பின் மீனவர் மத்தியில் தன் பணியை ஆரம்பித்தார்.

சிறிது காலம் சென்று மூன்று இந்தியர் உதவி கொண்டு திருநெல்வேலி சென்றார். அங்குள்ள கிராமங்கள் தோறும் நற்செய்தி எடுத்துச் சென்றார் அநேக சிறுவருக்கு திருமுழுக்கு கொடுத்தார். அங்கிருந்து தூத்துக்குடி சென்றார். கோவாவில் கையாண்ட முறையையே உபயோகித்தார். அவருக்கு தமிழ் நன்றாய் தெரியாது. அதை நன்கு கற்க அவருக்கு நேரமும் இல்லை.

ஜெபங்கள், விசுவாசப் பிரமாணம், பத்துக் கற்பனை ஞானப் பாட்டுகள் முதலியவற்றை பிறர் உதவியில் தமிழில் மொழி பெயர்த்து அதை மனப்பாடம் செய்து தெருக்களில் மணியடித்துச் சென்று மக்களுக்குப் போதித்தார். ஓய்வு நாட்களில் ஆண்கள், பெண்கள், பெரியோர், சிறியோர் அனைவரையும் அழைத்துப் போதித்தார். கிராமங்களிலும் இந்தவிதமாக நற்செய்தி கூறினார்.

இந்து மதம் எவ்வளவு ஆழமாக வேர் ஊன்றி இருக்கிறது என்றும் மக்களை முக்கியமாக சமுதாயத்தில் மேல் நிலையில் இருப்பவரை அசைக்கவே முடியாததை குறித்தும் மனம் வருந்தினார். அதே நேரம் கிறிஸ்தவராக மாறினவரிடமும் அவர் எதிர்பார்த்த வாழ்க்கை இல்லாது குறித்து பெரிய ஏமாற்றம் அடைந்தார். இந்தியாவில் வந்து தங்கிய போர்ச்சுக்கல் மக்களின் ஆடம்பர வாழ்க்கையும், துன்மார்க்க நடத்தையும் அவரை வாட்டியது. இவற்றையெல்லாம் காணாது அவர் தம் கண்களை மூடவும் துடியாக துடித்தார், ஜெபித்தார், மனம் தளர்ந்தார். வேறு இடங்களிலாவது ஊழியம் செய்தால் என்ன என்ற எண்ணம் மனதில் எழுந்தது.

இந்தோனேஷியா, ஜப்பான் முதலிய தேசங்கள் சென்றார். ஆனாலும் இந்தியாவை மறக்க முடியவில்லை. அடிக்கடி இந்தியாவிற்கு வந்து ஆலோசனை கூறி, கண்டிக்க வேண்டிய காரியத்தில் கண்டித்து ஊக்கமளித்துச் சென்றார். கடைசியாக கி. பி. 1552 ஆம் ஆண்டில் சைனா தேசத்திற்குள் நற்செய்தி கொண்டுபோகும் முயற்சியில்

அவர் மரித்தார். பிரான்சிஸ் சேவியர் சடலம் கோவா பேராலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சடலம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் பார்வைக்கு வைக்கப் படும்.

பிரான்சிஸ் சேவியரின் வாழ்க்கையும், கிறிஸ்துவின் அன்பால் அவரிடம் காணப்பட்ட தூண்டுதலும் நம் உள்ளத்தை தொடவில்லையா? பிறநாட்டிலிருந்து வந்து எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையில் நற்செய்தி பரப்பி இருக்கிறார்? எல்லா வசதிகளும் உள்ள நமக்கு ஆண்டவனுக்கு தொண்டு செய்ய அந்த ஆர்வம் உண்டா? செய்கின்றோமா? அப்படிச் செய்யவில்லையானால் நம் வாழ்க்கையில் குறுக்காக நிற்பது எது? சிந்திப்போம்.

பிரடரிக் சுவாட்ஸ்!

சுவாட்ஸ் அவர்கள் ஜெர்மனி தேசத்தை சேர்ந்தவர். இவர் சிறு பையனாக இருக்கும் தருணம் மரணப் படுக்கையில் இருந்த இவரின் தாயார் இவரை ஆண்டவரின் ஊழியத்திற்கு அர்ப்பணித்து, தன் கணவரிடமும் வாக்குறுதி வாங்கி தன் கண்ணை நிம்மதியாக மூடினார். இந்த நிகழ்ச்சி சுவாட்ஸ் அவர்களின் மனதின் அடித்தளத்தில் பதிந்தது.

அவரின் தந்தையும் அவரைப் பக்திப் பாதையில் வளர்த்து ஹால் பல்கலைக் கழகத்தில் படிக்க வைத்தார் அங்கு இவர் இந்தியாவிலிருந்து வந்த மிஷனெரி சகல்ஸாம் என்பவரிடம் நெருங்கிப் பழகினார். அவர் மூலம் இந்தியாவைப் பற்றி கேள்விப்பட்டு தான் இந்தியாவிற்கு மிஷனெரியாகப் போகவேண்டுமென்ற அவா அவர் உள்ளத்தில் எழுந்தது. அவரிடமே இவர் தமிழ் மொழியை நன்கு கற்றார். பின் தன் படிப்பையும் முடித்து டென்மார்க் சென்று குருவாக அபிஷேகமும் பெற்றார்.

கி. பி. 1730-ம் ஆண்டு சுவாட்ஸ் இந்தியாவில் தரங்கம்பாடி வந்து சேர்ந்தார். அவருக்கு அப்பொழுது வயது இருபத்தி நான்கு. அவர் முன்பே தமிழ் கற்றிருந்ததால் வந்தவுடனேயே அவர் தமிழில் பிரசங்கம் செய்யும் திறமையோடு இருந்தார். அவர் பதினாறு ஆண்டுகள் தரங்கம்பாடியில் தங்கி இருந்து, கிராமங்கள்தோறும் சென்று மக்களுக்கு நற்செய்தி கூறி, ஊழியத்திற்காக சிலரை தெரிந்தெடுத்து அவர்களுக்கு பாடங்கள் கற்றுக் கொடுத்து வந்தார்.

கிறிஸ்தவர் ஆக்கினால் மட்டும் போதாது. அவர்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்க தொடர்ந்து அவர்களுக்கு போதிக்கவும், உணர்த்தவும், ஆலோசனை கூறவும் (teaching, instruction, counselling) வேண்டும். அதுதான்

பெலமான அஸ்திவாரம் (solid foundation) என்று நம்பி அவ்விதமே செய்து வந்தார்

திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம் முதலிய இடங்களில் ஆங்கிலேயபடை தங்கி இருந்ததாலும், அங்கு இந்து மதம் ஆழமாக வேர் ஊன்றி இருந்ததாலும் அவருக்கு அங்கு ஊழியம் செய்ய ஆசை ஏற்பட்டது. சிப்பாய்களின் குழந்தைகளுக்கு, முதலில் அங்கு சென்றவுடன் பள்ளி ஒன்று ஆரம்பித்தார். பின் ஒரு கோவில் கட்டினார். அங்கு தன் சேவையை நடத்திய சமயம் பாண்டிய மன்ன னுக்கு விரோதமாக யுத்தம் ஆரம்பமானது. அச்சமயம் யுத்த களத்தில் காயமுற்றோருக்கு சுவாட்ஸ் உதவி செய்து வந்தார். இவர் சேவையை பாராட்ட மிஷனெரி சங்கத் திற்காக இவரை தலைவர் ஆக்கினார்கள். மேலும் இவரை வட்டார குருவாகவும் ஏற்படுத்தினார்கள்.

பதினாறு வருடங்கள் திருச்சிராப்பள்ளியில் தங்கி இருந்து சிப்பாய்களை மட்டுமல்ல அங்குள்ள அதிகாரிகளை யும் நல்வழிப்படுத்த அரும் பாடுபட்டார். கி. பி. 1769 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மன்னன் துளசியை கண்டு, அவர் அவையில், அரசனுக்கும், மக்களுக்கும் நற்செய்தி கூறினார் அதிலிருந்து மன்னனுக்கும் சுவாட்ஸ்க்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டது.

தஞ்சாவூரில் ஆண்டவர் தனக்கு ஒரு அனுகூலமான கதவை திறந்திருக்கிறார் என்பதை உணர்ந்து, புதிதாக வந்த மிஷனெரி ஒருவரை திருச்சிராப்பள்ளி ஊழியத்தை பார்க்க வைத்து இவர் தஞ்சாவூரில் தங்கினார். அரசனும் சுவாட்ஸ் அவர்களின் அரிய ஆலோசனையை அரசாங்க விஷயத்திலும் கேட்டு நடந்தார். என்ன இவர் அறிவு!

கி.பி. 1779-ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கமே இவரை ஹைதர் அலியிடம் தூது அனுப்பினார்கள் அலியும் இவரை அதிகமாக மதித்து வந்தார். தஞ்சாவூ

கோட்டையை முற்றுகையிட்ட நேரம், சுவாட்ஸ் ஒருவருக்கு கோட்டைக்குள் போகவும் வரவும் அனுமதி கொடுக்கப்பட்டது. மக்களுக்கு உணவுப் பற்றுக்குறை யும் விலைவாசி அநியாயமாக உயர்வும் ஏற்பட்ட நேரம் இவர் மக்களுக்கு நியாயவிலைக்கு பொருட்கள் கிடைக் கும்படி செய்தார். என்ன இவர் திறமை!

துளசி மன்னனுக்குப் பின் மகன் சரபோஜி சிறு வனாக இருந்தமையால், அமீர்சிங் அதிகாரத்தை கைப் பற்றி அக்கிரமம் எங்கும் தலையெடுக்க காரணமாக இருந் தான் ஆங்கிலேயர் அங்கு நீதி வழங்க சுவாட்ஸ் அவர் களை நியமித்தனர். இவரும் கொடுக்கப்பட்ட பொறுப்பை செம்மையாக நிறைவேற்றினார். சரபோஜி மன்னன் இவரை 'தந்தையே' என்று அழைப்பார். என்ன இவர் நீதியும் நியாயமும்!

இத்தனை பெரிய சாதனைகள் செய்தும் தன் குறிக்கோ ளாகிய நற்செய்தி பணிக்கு இவர் முதல் இடம் கொடுத் தார். ஒரு சிறு அறையில் தங்கி, மிகவும் எளிய வாழ்க்கை நடத்தி, ஒரு விலைகுறைந்த கருப்பு அங்கி அணிந்து தனக்கு வரும் பணத்தையும் ஏழைமக்களுக்கு கொடுத்து உதவி வந்தார். என்ன இவர் தியாகம்!

சுவாட்ஸ் அவர்களின் வெற்றிக்கு காரணம் அவர்களி டம் காணப்பட்ட நேர்மை என்கிறார்கள் (dynamic personality and Christian integrity) இவர் மூலம் கிறிஸ் துவை ஏற்றுக்கொண்டவர்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர். தெற்கே பாளையம்கோட்டை வரை இவர் வந்தார். ஐம்பது ஆண்டுகள் அரும்பாடு ஆண்டவனுக் காகப் பட்டு, கி. பி. 1698 இல் இவர் மரித்தார். மரிக்கும் முன் இவரிடம் ஆசீர்வாதம் பெற சரபோஜி மன்னனும் காத்திருந்து பெற்றார் என்றால் என்ன இவர் மேன்மை!

கிறிஸ்தவராகிய நம்மிடம் நற்செய்தி பற்றிய வாஞ்சையும், ஆர்வமும் உண்டா? அவரிடம் காணப்பட்ட நேர்மையில் கடுகளவுண்டா? கிறிஸ்தவ சமுதாயம் மட்டுமல்ல, அரசனும், அரசாங்கமும், அவை மக்களும், ஆங்கிலேயரும் மதித்தனரே அவரை ஏன்? ஏன்? அவர் வாழ்க்கை தம் உள்ளத்தை தொடவில்லையா?

டாம்லின்சன்!

டாம்லின்சன் லண்டனில் கி.பி. 1877 இல் ஒரு சிறந்த குருவானவரின் மகனாகப் பிறந்தார். தாய் ஒரு மிஷனெரியின் ம்கள். தந்தை சைனாவில் எட்டு ஆண்டுகள் மிஷனெரியாக பணியாற்றி மனைவியின் சுகவீனத்தால் இங்கிலாந்து திரும்பியவர். டாம்லின்சன் மான்செஸ்டரில் டிட்ஸ்பெரி கல்லூரியில் படித்தவர். எதைச் செய்தாலும் அதை திறம்படச் செய்யும் பழக்கம் சிறு பிராயத்திலிருந்தே அவரின் உடன்பிறப்பு.

ஒரு தலைவனுக்குரிய எல்லாப் பண்புகளும் அவருக்கு இயற்கையாக அமைந்திருந்தன அவர் தன் கல்லூரியில் ஒரு ஜெபக்குழுவை உருவாக்கினார். அதில் அவர் செய்யும் ஜெபம் குறித்து, உடன் மாணவர் அதிசயித்தனர். டென்னிஸ், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளிலும் அவர் அதிக ஆர்வமுள்ளவர்.

இந்தியாவில் திப்புசுல்தான் ஆதிக்கம் மைசூரில் முடிவடைந்து; கி.பி. 1799 இல் இந்து அரசர்கள் மீண்டும் அரசாட்சியை கைப்பற்றினர். ஆகிலும் கி.பி. 1820 இல் ஆங்கிலேயரின் அதிகாரம் அங்கு வந்தபின்தான் இங்கிலாந்து தேசத்திலிருந்து மிஷனெரிமார்கள் மைசூர் வந்து இறங்கினர்.

சாடே என்ற மிஷனெரியுடன் பணிபுரிய டாம்லின்சன் இந்தியா அனுப்பப்பட்டார். அங்குள்ள அரச குடும்பத்தினரிடம் நட்புகொண்டு மிஷனெரிமார்கள் பலப்பல பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்தனர். மைசூரில் அலுவலகங்களில் வேலை செய்யும் இந்திய அதிகாரிகள் பெரும்பாலும் அப்பள்ளிக்கூடங்களில் கற்று வெளிவந்தவர். இயேசு என்ற நாமம் எங்கும் தெரியவந்தது.

டாம்லின்சன் கன்னடம் கற்றுக்கொள்ளும்படி ஹாஸ்சன்க்கு (Hassan) ரேட்பொன் என்பவரிடம் அனுப்பப்பட்டார். ஹாஸ்சனுக்கு மைசூரிலிருந்து இரவு ரெயிலில் சென்று பின் இருபத்தாறு மைல்கள் மாட்டு வண்டியில் செல்லவேண்டும். அவ்விதம் சென்றும், ரேட்பொன் அவருக்கு குளிப்பதற்கும் சாப்பிடவும் மட்டும் நேரம் கொடுத்து கன்னடம் பாடம் ஆரம்பித்துவிட்டார். தகுந்த ஆசிரியரும் ஊக்கத்துடன் படிக்கும் மாணவரும் இருந்தால் கேட்கவா வேண்டும். டாம்லின்சன் ஆர்வத்தோடு கன்னடத்தை வாசிக்கவும், எழுதவும், திறம்பட பேசவும் கற்றுக்கொண்டார் சிறிது காலத்தில்.

ஊழியத்தின் ஆரம்பத்தில் முதல் இரண்டு ஆண்டுகளை மைசூர் மேல்நிலைப்பள்ளியில் ஆங்கிலேய ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தன் நற்செய்தி பணியை இவர் மாணவர் மத்தியில் ஆரம்பித்தார். இது இவருக்கு அரிய வாய்ப்பாக இருந்தது. மாணவர் அனைவரும் அவரை நேசித்தனர். பள்ளியில் உள்ள தொளாயிரம் மாணவரின் பெயரும் தெளிவாக சொல்லக்கூடிய அபூர்வ ஞாபகசக்தி பெற்றிருந்தார். பள்ளியைவிட்டு வெளியேறிய மாணவரைக் கண்டால் அவரை பெயர் சொல்லி அழைக்கும் ஆற்றல் உடையவராக இருந்தார்.

கி.பி. 1910 இல் ஒரு ஆண்டு இங்கிலாந்து சென்று பின் மாவட்டத்தின் முழு நேர நற்செய்தி, ஊழியராக கி.பி. 1911 இல் பதவி ஏற்றார். இந்தியரை ஊழியத்தில் பழக்குவித்தார். அவர்களுக்கு உதவியாக 'போதகப் போதினி' என்னும் மாதாந்திரப் பத்திரிக்கை ஒன்று எழுதினார். பணியாளர் வெள்ளை வேஷ்டியும், வெண்மையான மேலங்கி (Coat) வரிசையாக பித்தான் வைத்து தைக்கப்பட்டதையும், தலைப்பாகையையும் அணிந்திருந்தனர்.

டாம்லின்சனும் இவர்களும் பல இடங்களுக்கும், கிராமங்கள் தோறும் சென்று கூடாரம் அடித்து தங்கி அங்கு

நற்செய்தி பிரசங்கித்தனர். காலையில் வேலைக்குப் போகும் முன் மக்களை சந்தித்தார். அவர்கள் மாலை வீடு திரும்பின பின் அவர்களுக்கு செய்தி சொல்லி "மாஜிக் லான்டர்ன்" (Magic-lantern) மூலம் வேதாகமக் கதைகளை காட்டி விளக்கினார். சிறியவரும் பெரியவரும் திரண்டு வந்தனர் இடங்களை குறிக்கும் சிறு சித்திரப்படம் (map) வைத்துக் கொண்டு திட்டமிட்டு வேலை செய்தார்.

அவர் வாழ்க்கையே ஒழுங்கென்னும் நேர்கோட்டில் அமைந்தது. எல்லாம், மணி தப்பாமல் செய்யும் பழக்கத் தவர். அவர் சைக்கிளில் செல்வதை வைத்து மணி சரியாக எவரும் சொல்லமுடியும். சைக்கிளில் மணிக்கு பன்னி ரண்டு மைல் வீதம் நூறு மைல் தூரம் போய் பிரசங்கித்து திரும்புவார். தன் சிநேகிதர்களிடமிருந்து பணம் வரு வித்து முழுநேர ஊழியர்களை ஏற்படுத்தினர்.

மக்களின் மனதை அன்பாலும், தொண்டாலும் கவர்ந்தார். கூட்டுறவு சங்கங்களை ஆரம்பித்து வைத்தார். பஞ்சகாலத்தில் (1876-8) அனாதைகள், திக்கற்றவர்கள் அனைவருக்கும் உதவினர். மக்கள் நலம் கருதி சேவை செய்தார். கொத்தடிமைகளை மாற்றி விடுவார் என பெரிய முதலாளிகள் பயந்தனர். வியாதியஸ்தரை சந் தித்து மருந்தும் கொடுத்தார். தன் சொந்த செலவில் நான்கு மாணவரை படிக்க வைத்தார்.

டாம்லின்சனின் தூதுபணியின் மையம் எப்பொழுதும் கிறிஸ்துவும் சிலுவையும்தான். ஒருசமயம் அதை செம் பொருளாகக் கொண்டு பிரசங்கிக்கும்போது, அவர்களுக்கு விளங்கத்தக்கதாக 1) இயேசு தருமராஜா (king of righteousness) 2) இயேசு பிரமாகாசி (imperishable) 3) இயேசு சாது (greatest of the sadhus) 4) இயேசு ஜெனபகரி (laid down His life) போதித்தாராம். கன்னட பழமொழிகளை கற்று அதை உபயோகித்தார். மக்கள் பிரச்சனைகளுக்கு வேதத்தில் தீர்வுகாண வழிநடத்தினர்.

இந்துமத குருக்களோடு அவர் மனம் புண்படாமல் பேசி அவர்களுக்கு விளக்கினர். சமய சந்தர்ப்பங்களை அனுசரித்து பேசுவார். புதிய அணைக்கட்டு கட்டின சமயம் "வாழ்வளிக்கும் நீர் இயேசு" என்று உபதேசித்தார். சிறுவரை இயேசு ஆசீர்வதிப்பதை, சிறுவர் மனம் கவர திரைப்படம் காட்டி விளக்கும் நேரம் ஒரு சிறு குழந்தை எழுந்து ஓடி வந்து அந்தப் படத்திலிருக்கும் குழந்தைகளுடன் நிற்க முன் வந்ததாம். அவ்வளவு இயற்கையானது அவர் போதனை.

டாம்லின்சன் திருச்சபைகளுக்கு செய்த தொண்டை யாரும் மறக்க முடியாது. திருவாங்கூரில் நடந்த மாரமோன் (Maramon) பேரவைக்கும், உலக யுத்தத்தின் சமயம் மேற்கு கடற்கரை பகுதியிலுள்ள பேசல் மிஷன் திருச்சபைகளுக்கும், கன்னட வேதாகமத்தை புதுதிருப்புதல் செய்ததற்கும், எல்லாவற்றிற்கும் உழைத்த முக்கிய சபையின் அங்கத்தினராக இருந்ததற்கும் திருச்சபை அவருக்கு கடமைப்பட்டு இருக்கிறது. இறையியல் கற்றுக் கொள்ள ஒரு ஐக்கிய கன்னட கல்லூரி டும்கூரில் ஏற்படுத்தினர்.

டாம்லின்சன் ஒரு பெரும் எழுத்தாளர். அநேக கைத்துண்டு தாள்களும் கன்னடத்தில் எழுதினர் "உண்மையாகவே அரசன்" (The king of truth) என்ற புத்தகமும், மாற்கு நற்செய்தி நூலுக்கு விளக்கமும் அவரின் சிறப்பான படைப்பு.

அநேக புத்தகங்கள் எழுதி இருக்கலாம். ஆனால் அவருக்கு நேரமில்லை. விருத்தாந்த பத்திரிகையை இவர் தொடர்ந்து நடத்தினர். ஆனல் அதை நிறுத்த வேண்டிய நிலை வந்தவுடன் வருந்தினர், ஜெபித்தார். ஆனல் மைசூர் வெஸ்லி அச்சகமும், மதராஸ் கிறிஸ்தவ இலக்கிய சங்கமும் இணைக்கப்பட்டது. அதின் மூலம் அநேக கிறிஸ்தவ கன்னட புத்தகங்கள் வெளிவர வந்த வாய்ப்பு அவரை மகிழ்வித்தது.

டாம்லின்சன் பிற்காலத்தில் தனக்கு துணைவியராக ஒரு மிஷனெரி அம்மையாரை தெரிந்தெடுத்தார். அவர் இவர் ஊழியத்திற்கு மிகவும் உதவிசெய்தார்.

அல்லும் பகலும் தொண்டு செய்வதே தன் வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்து முன்னேறிய டாம்ஸின்சன் தன் தாய்நாடு திரும்பவும் விரும்பாது உழைத்தார். ஜெபத்திற்கும், வேலைகளுக்கும் சரிவர நேரத்தை ஒதுக்கி வைத்த அவர் விளையாட்டிற்கும் செவ்வாய் மாலை ஒருமணி நேரம் ஒதுக்கி வைத்தார். இறையியல் கல்லூரி மாணவர்களை பந்தாட்டத்தில் பழக்கி அந்த மாவட்டத்தில் வெற்றியும் பெற்று வந்தார். ஆனால் முடிவாக அவர் மரணம் அவர் விளையாடும் தருணம் சந்திக்க வந்தது.

கி. பி. 1744-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ஆம் தேதி இவர் டென்னிஸ் விளையாடும்போது நெஞ்சுவலி வந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் அன்று இரவு அவர் மரித்தார். உடன் ஊழியரும், மாணவரும், நண்பர்களும், சிநேகிதர்களும், ஏழைகளும் கண்ணீர் விட்டனர்.

டாம்லின்சன் தன் வாழ்க்கையில் நற்செய்தி பணிக்காக தன் உடல், பொருள், நேரம் அனைத்தும் செலவிட்டார். "He was on fire with evangelistic zeal" என்று அவரைப்பற்றி சொல்லப்படுகிறது. இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்து அவ்விதம் சேவை செய்தார். நாம் என்ன செய்கிறோம்? காடானாலும், மேடானாலும் தொண்டு செய்வோம் என்று சொல்லிப் பாடி உதட்டளவில் மட்டும் நிறுத்தி விடுகிறோமா? டாம்லின்சன் வாழ்க்கை நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும்.

அத்தியாயம் 8

சீகன்பால்க்!

மார்ட்டின் லூத்தரால் ஏற்பட்ட சீர்திருத்த மதப் புரட்சி ஐரோப்பா எங்கும் காட்டுத் தீபோல் பதினெட்டாம் நூற்றுண்டில் பரவ ஆரம்பித்தது. மக்கள் சடங்காச்சாரங்களையும, பாரம்பரியங்களையும், சட்டதிட்டங்களையும், சமய ஆடம்பரங்களையும் வெறுக்க ஆரம்பித்தனர். விழிப்புணர்ச்சி எங்கும் தாண்டவமாடியது. மீண்டும் நற்செய்தி கலப்பற்று எங்கும் தலை தூக்க ஆரம்பித்தது. நற்செய்தியை பரப்பும் அவா மக்கள் உள்ளங்களை குடிகொண்டது. பல மிஷனெரி ஊழியங்கள் தலையெடுத்தன.

டென்மார்க் தேசத்தின் அரசனை நான்காம் பிரட்ரிக் லூத்தரன் சபையை சேர்ந்தவர் உலகத்தின் மக்கள் யாவரும் நற்செய்தி கேட்கவேண்டுமென்று அவர் உள்ளத்தில் ஒரு தூண்டுதல் ஏற்பட்டதின் விளைவாக உலகின் பல பாகங்களுக்கும் மிஷனெரிகள் அனுப்பப்பட்டனர்.

அக்காலத்தில் இந்தியாவுடன் ஐரோப்பாவின் பல நாடுகள் வர்த்தகத் தொடர்பு உடையதாயிருந்தது. ஆகவே டென்மார்க் அரசன் இந்தியாவிற்கு அனுப்புவதற்கு தகுதியுள்ளவரைத் தேடி. முடிவாக ஜெர்மன் தேசத்தை சேர்ந்த பல்கலை கழகத்திலிருந்து இரண்டு வாலிபரை தெரிந்தெடுத்து இந்தியாவிற்கு அனுப்பினர். அவர்களில் ஒருவர் சீகன்பால்க் அடுத்தவர் புளுச்சா ஆவர்.

சீகன்பால்க் தன் சிறு வயதிலேயே தன் பெற்றோரை இழந்து, வாழ்க்கையில் பல கஷ்டங்களை அனுபவித்து தன் பதினாரும் வயதில் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றவர். தன் சகோதரன் புளுச்சாவும் தன்னுடன் வருவதால் இருவரும் உற்சாகத்துடன் புறப்பட்டனர்.

பல எதிர்ப்புகள் இருந்ததை அவர்கள் பொருட் படுத்தவில்லை. அவர்கள் இருவரும் அபிஷேகம் பெற்று டென்மார்க்கின் மிஷனெரிகளாக சோபியா என்னும் கப்பல் ஏறினர். நெடுநாள் கப்பல் பிரயாணத்தில் இருவரும் ஜெபத்திலும், தியானத்திலும், தரித்திருந்து, கிறிஸ்துவுக்காக எந்த துன்பத்தையும் தாங்கும் மனப் பான்மையுடன் இருந்தனர். கி. பி. 1706- ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் தேதி தரங்கம்பாடி வந்து சேர்ந் தனர்.

"அலைகள் சூழ்ந்த கிராமம்" (Village of Vaves) என்று, அழைக்கப்பட்ட தரங்கம்பாடி என்ற கிராமம் டேனர்களால், தஞ்சாவூர் மன்னனுக்கு வரிகட்டப்பட்டு ஒரு முக்கிய வியாபாரஸ்தலமாக விளங்கியது. கடல் மார்க்கத்திலும் பல இன்னல்களை அனுபவித்து தரங்கம் பாடி வந்து சேர்ந்த மிஷனெரிகளுக்கு இங்கு வரவேற்பு இல்லை. பல கம்பெனி மக்கள் பெயரளவில் கிறிஸ்தவராக இருந்து துன்மார்க்க ஜீவியம் செய்ததால் அவர்கள் மெய் யான மிஷனெரிமார்களை விரும்பவில்லை. கம்பெனியின் மக்களுக்கு தொழுகை நடத்த அனுப்பப்பட்ட குருக்களும் கடமைக்கு ஊழியம் செய்து வந்தார்கள். ஆகையால் அவர்களும் ஆதரவு காட்டவில்லை.

மதத்தை பரப்புதல் வியாபாரத்திற்கு தடையாக இருக்குமென்று கருதினர் அதிகாரிகள். டென்மார்க் அரசனிடம் இருந்து செய்தியும் இங்கு எட்டவில்லை. கப்பலி லிருந்து சிறு படகுகள் மூலம் கரைசேர வேண்டிய அவர் கள் கப்பலிலேயே தங்க வேண்டியதாயிற்று. வேறு ஒரு கப்பல் மாலுமிகள் அவர்களை படகின் மூலம் கரை சேர்த்த னர்.

இந்தியாவின் மணலில் மிதித்தவுடன் ஆனந்தம் கொண்டனர். அவர்களை ஒரு சாதாரண மனிதனே வர வேற்று போர்ச்சுக்கல் நாட்டின் கலப்பு மக்கள் மத்தியில் இடம் கொடுத்தார். சீகன்பால்க் அவர்கள் பின் எழுதும்

தருணம் "இந்த புனித வேலை எதிர்ப்புகளின் மத்தியில் ஆரம்பமானது" (His Holy work had begun against great resistance) என்று குறிப்பிடுகிறார்.

சீகன்பால்க் அவர்கள் ஏதோ சிறிய காலம் இந்தியாவில் இருந்து போக எண்ணாமல் நிரந்தரமான பல திட்டங்களுடன் தன் வாழ்நாட்களையே இந்திய பணிக்காக அர்ப்பணித்து தொண்டு செய்ய முன்வந்தார். அதற்கு முதல் தேவை மொழி கற்றுக்கொள்ளுதல் என்பதனை உணர்ந்து தமிழும், போர்ச்சுக்கல் மொழியும் கற்க ஆரம்பித்தார். பள்ளிச் சிறுவருடன் உட்கார்ந்து ஓலையிலும், மண்ணிலும் எழுதியும், ஆசிரியர் ஒருவரை அமைத்தும் தீவிரமாக மொழி கற்றார்.

ஒரே ஆண்டில் சீகன்பால்க் நன்றாய் பேசும் திறனை பெற்றார். பள்ளிப் பிள்ளைகளுக்கும், அடிமையாக வாழ்ந்த சிறுவருக்கும், மற்றவருக்கும் நற்செய்தி சொல்லப்பட்டது. இரண்டு ஆண்டிற்குள் முப்பத்தைந்து மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். கி. பி 1707 இல் வழிபாட்டிற்காக ஒரு ஆலயம் "எருசலேம்" என்ற பெயருடன் கட்டப்பட்டது.

கி. பி. 1709 இல் இந்தியாவில் நடக்கும் இந்த ஊழியம் பற்றிய செய்தி ஐரோப்பாவை எட்டினது இங்கிலாந்திலுள்ள கிறிஸ்தவ அறிவு வளர்ச்சிக் கழகம் (S. P. C. K.) இந்த வேலையில் ஆர்வம் காட்டி இருபது பவுனை உதவிக்காக அனுப்பியது: ரூபாய் 600வுடன் புறப்பட்டு வந்த சீகன்பால்க் அவர்களுக்கு இது பணியாற்ற உதவியாயிற்று. இரட்சிப்பின் செய்தி எங்கும் பரப்பப்பட்டது.

திருமறையை தமிழில் மொழிபெயர்த்து அளிக்க வேண்டுமென அவர் உள்ளத்தில் ஒரு துடிப்பு எழுந்தது அதை செய்தும் முடித்தார். கி. பி. 1708-ம் ஆண்டு புதிய ஏற்பாட்டை தமிழில் மொழிபெயர்த்து முடித்தார். இங்கிலாந்தில் இருந்து ஒரு அச்சுப்பொறியும், ஜெர்மெனி

லிருந்து தமிழ் அச்செழுத்துக்களும் அனுப்பப்பட்டது. இந்த மாபெரும் வேலையை சீகன்பால்க் மக்களின் நன்மைக்காக முடித்தார்.

இன்னும் தொடர்ந்து பாட்டுப்புத்தகங்களும், ஜெபங்களும், உபதேச நூல்களும் வெளியிடப்பட்டன. பல கிறிஸ்தவ பள்ளிக்கூடங்கள் ஆரம்பமாயின. தம் ஊழியத்தை விரிவாக்க பல இடங்கள் தமிழ் நாட்டில் சுற்றி வந்தார்

கி. பி. **1711**-இல் ஜெர்மனிக்கு திரும்பி தன் பணி குறித்துப் பல இடங்களில் கூறி, சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையுள்ள ஒரு மாதுவை மணந்து மீண்டும் இந்தியா திரும்பினர். நல்ல மேய்ப்பர்களை உண்டுபண்ணி நாடெங்கும் பணியாற்ற எண்ணி ஆசிரியர்களுக்கு தனிப்பயிற்சி அளித்தார். அநேக ஊழியக்காரரை எழுப்பினர்.

இத்தனை அரிய பெரிய காரியங்களை சாதித்த அவர் கி. பி 1718ம் ஆண்டில் நோய்வாய்பட்டார். மரணத்தருவாயிலிருந்த அவர் தம்மை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, சூரியப்பிரகாசம் போன்ற ஒளி தன் முகத்தில் படுவதை உணர்ந்து, தனக்கு விருப்பமான பாடல்களை தன்னை சுற்றி குழுமியுள்ளவரை பாடச்செய்து தன் ஆவியை விட்டார். அவர் மரிக்கும் தருணம் அவருக்கு வயது முப்பத்து ஆறுதான்.

குறுகிய காலத்தில் இந்த வாலிபன் எத்தனை பெரிய சாதனைகள் செய்தார். எண்ணிப்பார்க்கவும் முடியுமா? ஏட்டில் எழுதவும் முடியுமா? இவரின் தொண்டை திருச்சபை மறக்கவும் முடியுமா? அவரால் புதிய ஏற்பாடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதென்றால் அவரை 'விடிவெள்ளி' என்று அழைப்பது மிகையாகாது. இன்னும் தரங்கம்பாடி அலைகள் அதை உணர்த்துகிறது. அகில உலக வாலிபர் ஆண்டில் இந்த வாலிபரின் சீரிய செய்கைகளை உணர்ந்து ஆண்டவரை சீகன்பால்க் அவருக்காக துதிப்போம்.

அத்தியாயம் 9

வில்லியம் றிங்கல் தௌபே!

ஜெர்மனி சிலிஷியா நாட்டில் றிங்கல் தௌபே என்ற ஒரு ஐயரின் முதல் புதல்வனாக வில்லியம், றிங்கல்தௌபே ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி கி. பி. 1770ம் ஆண்டு பிறந்தார். நாஸ்திகத்தால் கறைபடாத அக்குடும்பத்தில் தெய்வ பக்தியில் இவர் வளர்க்கப்பட்டார். பிள்ளைப்பருவத்தில் தன் தந்தையின் கிச்சிலித் தோட்டத்தில் கவலையற்று ஆடிப் பாடி விளையாடி வந்தார். வாலிபனாக ஒரு எழுப்புதல் கூட்டத்திற்கு சென்ற இவரை ஆண்டவர் தொட்டார். அன்றே தன்னை ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்.

பின் ஹாலே சர்வகலாசாலை சேர்ந்தார். மிஷனெரி ஊழியம் அவர் உள்ளத்தை கவர்ந்தது. வெளி நாடுகள் செல்லும் எண்ணம் தகப்பனுக்கு விருப்பமில்லை யென்றாலும் தகப்பன் சம்மதம் கொடுத்தார். இவர் குரு அபிஷேகமும் பெற்றார். லண்டன் மிஷன் சங்கத்தாரின் முதல் மிஷனெரியாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். இவர் வந்த கப்பலோ ஒரு அடிமை வியாபாரக் கப்பல். பிரயாணத்தில் எதிர்காற்றால் கடல் கொந்தளித்து பல இன்னல்கள் ஏற்பட்டது. ஆனால் கர்த்தரின் கரம் அவருடன் இருந்தது.

தென் ஆப்பிரிக்கா முனையில் ஒரு மாதம் தங்கி கப்பலை பழுதுபார்த்து, ஆகாரம் சேகரித்து மீண்டும் புறப்பட்டனர். றிங்கல்தௌபே கி. பி. 1797-இல் கல்கத்தா வந்து சேர்ந்தார் வந்த அவருக்கு எண்ணடங்கா பிரச்சனைகள் மொழியும் தெரியாமல், தங்க வீடுமில்லாமல் அலசடிப் பட்டார். முடிவாக வியாதிப்பட்டார். அதன் விளைவாக மீண்டும் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டார். கப்பலில் அவர் ஊக்கமாய் ஜெபித்து சுகம் பெற்றார்.

இங்கிலாந்து சேர்ந்த அவர் தன் தாய்நாடு செல்லாமல் மீண்டும் இந்தியாவிற்கு திரும்பினர். இம்முறை அவர் தரங்கம்பாடி வந்து சேர்ந்தார். தரங்கம்பாடி இயற்கை காட்சி அவர் மனதை மகிழ்ச்சியால் நிறைத்தது. இந்தியாவின் தென்பகுதியில் தன் சேவை தேவை என்பதனை உணர்ந்தார்.

சிறிது காலத்தில் தமிழ் நன்ருய் கற்ருர். சங்கத்தார் பட்டாள குருவாக மதராஸிக்கு அனுப்ப இருந்தனர். இவருக்கு அதில் விருப்பமில்லை. பரி.பவுல் அப்போஸ்தலனுக்கு (அப் 16:9) மெக்கெதானியாவிலிருந்து அழைப்பு வந்தது போல இவருக்கு திருநெல்வேலியிலிருந்து அழைப்பு வந்தது. தரங்கம்பாடியிலிருந்து பாய்மரக்கப்பலில் ஏறி தூத்துக்குடி வந்து பின் பாளையங்கோட்டை சேர்ந்தார்.

சாயர் என்ற ஒரு போர்த்துகீஸ் வர்த்தகர் றிங்கல் தௌபே இடம் அதிசயமாக அன்புகொண்டு, அவரின் அன்பளிப்பாக ஒரு குதிரை கொடுத்தார். அது றிங்கல் தௌபேக்கு அதிக உதவியாக இருந்தது. மேலும் சாயர் புதிதாக கிறிஸ்தவ மதத்தை தழுவும் மக்கள் தங்க ஒரு நிலமும் வாங்கி தந்தார். அவரின் பெயரில் அழைக்கப்படும் அப்பகுதி சாயர்புரம் ஆகிவிட்டது.

குதிரையில் பல இடங்கள் சென்று, வெயில் என்றும் பாராமல் சுற்றி நற்செய்தியை பிரசங்கித்து மக்கள் மனதை கவர்ந்தார். புதிதாக கிறிஸ்தவர் ஆனவர்களின் துன்பங்களில் அவர்களுக்கு ஆறுதலாக இருந்தார். விக்கிரக பவனியில் தீவட்டி பிடிக்கவும், திருநீா நெற்றியில் அணியவும் பலவந்தம் பண்ணப்படுவதை கண்டு வருந்தினர்.

நாசரேத், குலசேகரப்பட்டணம், முதலூர், ஆத்திக்காடு, திருச்செந்தூர் முதலிய எல்லா இடங்களும் சுற்றித்திரிந்தார். அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஆனல் தகுதி அற்றவர்களும், சுயநலம் கருதி வந்தவர்களை

யும் அனுப்பி விட்டார். மூசா என்னும் முகமதிய தேச வுக்காரன், கடன் கிடைக்குமென்ற எண்ணத்துடன் வந்தது கண்டு ஆலோசனை கூறி அனுப்பிவிட்டார். நாட்டுப் போதகர் சத்தியநாதன் இவருக்கு உதவியாக இருந்தார்.

றிங்கல்தௌபே மிகவும் எளிய வாழ்க்கை நடத்தி ஒரு குடிசையில் தங்கி, கூழ் அருந்தி, அணிவதற்கு நல்ல ஆடையின்றி, தனித்தவராக, உடல்மெலிந்து துன்பங்களால் நலிந்து காணப்பட்டார். அவர் தலையில் வைக்கோலால் செய்யப்பட்ட தொப்பி. ஆனால் அந்த நிலைமையில் தன் பணத்தையும் மற்றவருக்கு கொடுத்தார். மற்றவரால் 'மகாத்மா' என்று அழைக்கப்பட்டார். அவர் ஒரு ஜெபவீரனாக இருந்தார். அவருக்கு சுகம் அளிக்கும் வரமிருந்தது. அநேகர் சுகம் பெற்றனர்.

ஒரு சமயம் ஒரு தாய், தன் மகனை அவரிடம் ஒன்றும் சொல்லாமல் கொடுக்க அவர் அன்புடன் வாங்கி தன் மடியில் அமர்த்தி தடவி பின் கீழே விட்டாராம். பையன் தாயிடம் ஓடினானாம். அதன்பின்தான் அவன் நடக்க முடியாமல் இருந்த பையன் என்று தெரிய வந்ததாம். அவர் தெய்வீக சுகம் அளிக்கும் அற்புத வரம் பெற்றிருந்தார்.

கி.பி. 1808 இல் தென்திருவாங்கூரில் பெரிய கலகம் உண்டானது. திவான் வேலுத்தம்பி தளவா கப்பம் கட்டவில்லை. அதனால் அவரை பதவியிலிருந்து நீக்க தீர்மானித்தனர். கொல்லத்திலிருந்து கொச்சிக்கு பட்டாளம் ஒன்று அனுப்பப்பட்டது. பட்டாளத்தையும், மூன்று துரைமாரையும் தளவா கொன்றான். கலகம் வலுத்தது. கிறிஸ்தவர் சிதறடிக்கப்பட்டனர். வேத மாணிக்கம் என்ற ஊழியர் றிங்கல்தௌபே இடம் ஓடி வந்து எல்லாம் கூறினார்.

யுத்தத்திற்குப் பின் றிங்கல்தௌபே திருவாங்கூரில் மைலாடியில் வந்து ஒரு குடிசையில் வாழ்ந்தார். அங் முன்னூறு பேருக்கு திருமுழுக்கு கொடுத்தார். கர்ண

மெக்காலேயை சந்தித்து ஆலயம் கட்டவும், பள்ளிக் கூடங்கள் கட்டவும், உத்திரவும், உதவியும் வாங்கினார். செமினேரி ஒன்று ஆரம்பித்து பன்னிரண்டு மாணவர்களை ஊழியத்திற்கு பழக்கினார். கி.பி 1810 இல் வெள்ளத்தால் மக்கள் தாக்கப்பட்ட நேரம் கொல்லம் சென்று ஐரோப் பிய தனவான்களிடம் பொருளும் பணமும் வாங்கி வந்து மக்களைக் காத்தார்.

பஞ்ச காலத்தில்தானே நெல்லை வாங்கி வந்து அளந்து கொடுத்தார். வறண்ட காலம் ஒன்றில் பார்த்த வர் அதிசயிக்கத்தக்கதாக மழைக்காக ஜெபம் செய்யவே மழை உடனே பெய்ததாம். அப்பகுதியில் ஏழு கோவில் களும், ஏழு பள்ளிக்கூடமும் கட்டி 1100 பேரை கிறிஸ்த வர் ஆக்கினார்.

தன் அன்பின் தங்கை அன்னாளுக்கும், தம்பி ஏர் னெஸ்ட்க்கும் அடிக்கடி எழுதின கடிதங்கள் மூலமும் அவரின் தினக்குறிப்புகள் மூலமும் அவர் வாழ்க்கை வரலாறு நமக்கு தெரியவருகிறது. குடும்பத்தினரை அதிக மாக நேசித்தார். பிரிவு அவரை வாட்டினது. ஆனாலும் கிறிஸ்துவுக்காக அனைத்தையும் துறந்தார்.

றிங்கல்தௌபே தன் ஊழியம் இப்பாகத்தில் முடிந் தது என்று எண்ணினார். ஒரு தீர்மானத்திற்கு வந்தார். கப்பல் ஏறி ஆப்பிரிக்கா சென்றார். கடைசியாக அவர் மலேக்காவிலிருந்து பட்டேரியாவுக்கு கி. பி. 1816 செப் டம்பர் 27-ம் தேதி கப்பல் ஏறினார். அதன்பின் அவரைப் பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. அவர் மறைவின் காரணம் கடவுள் தவிர யாரும் அறியார்.

றிங்கல்தௌபே என்றால் 'மணிப்புறு' என்று பொருள். மணிப்புறு போல் இவர் நற்செய்தியை பல இடங்களில் கூறி அறிவித்தார். ஆனால் முடிவில் மலர்மாலை சார்த்த ஒரு சமாதியோ அஞ்சலி செலுத்த அவர் கல்லறை மேல் ஒரு ஆலயம் கட்டவோ முடியாமல் மறைந்தார்.

அவர் உடல் ஆப்பிரிக்காவிலோ அல்லது பசிபிக் மகா சமுத்திரத்திலோ நாம் அறியோம். ஆனால் தென் இந்தியாவில் அவர் ஊழியம் மறக்கமுடியாது. இத்தனை பெரிய மகாத்துமாவின், பரிசுத்தவானின் பெயரைக்கூட அறியாதவர்களாக நாம் இல்லையா? தனக்கென்று வாழாது பிறருக்கென்று வாழ்ந்த இந்த உத்தம ஊழியனின் சரித்திரம் நம் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து கண்களில் கண்ணீரை உண்டாக்கவில்லையா? அவர் வாழ்க்கைக்காக ஆண்டவரை போற்றி அதை நாம் பயன்படுத்திக்கொள்வோம்.

ராக்லண்ட்!

இந்தியாவிற்கு இங்கிலாந்திலிருந்து வந்த மிஷனெரிகளில் முதல்வர் ராக்லண்ட்தான். இங்கிலாந்தில் குருப்பட்டம் பெற்று கேம்பிரிட்ஜ்யில் பணியாற்றினுர். சனிக்கிழமை மாலையில் அங்கிருந்த பசுமையான புல்வெளியில், அழகிய பூந்தோட்டத்தின் மத்தியில் அங்குமிங்கும் நடந்து தன் பிரசங்கத்தை ஆயத்தப்படுத்துவது அவர் வழக்கம். அங்குள்ள அனைவரின் அன்பையும் பாராட்டையும் பெற்றுர். வாழ்க்கை யாதொரு சலனமின்றி அமைதியாக சென்றது.

ஒரு நாள் ஹென்றி வென் என்ற சி. எம். எஸ். செயலாளர் கேம்பிரிட்ஜ்க்கு வந்தார். அவரை தன் அறைக்கு அன்புடன் அழைத்துச்சென்று, தன் நண்பர்களை கூட்டி ஹென்றிவென் பேசுவதை கேட்டார். அவரின் பேச்சு ராக்லண்டின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. அவரை அப்படியே குலுக்கிவிட்டது. அவருடைய நிம்மதியான வாழ்க்கையையும், சிறப்பையும், அவரின் விருப்பங்களையும் அசைத்தது. அவர் முழுவதும் வேறு மனிதனுக மாறினுர். கடவுளின் கரம் அவர் உள்ளத்தை தொட்டது.

வெளிநாடு சென்று கிறிஸ்துவின் நற்செய்தி தானும் சொல்லவேண்டும் என்ற விருப்பம் உதித்தது. அதுவரை வெளிநாடு செல்ல விரும்பாத அவர் மனதில் கிறிஸ்துவுக்காக பாடு அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கோதுமை மணியானது நிலத்தில் வீழ்ந்து சாகவேண்டும் (யோவான் 12:24) என்ற எண்ணம் அவர் மனதில் எதிரொலித்தது. ஏழு மாதத்தில் நவம்பர், இருபதாம் தேதி கி. பி. 1815 இல் அவர் இந்தியா வந்து சேர்ந்தார். அவருக்கு வயது முப்பது.

தமிழ் மொழியை ஆறுமாதம் கற்றூர். இந்து மதம் பற்றியும் கற்று அறிந்தார். எரிகோவின் மதில்கள் மாதிரி இந்து ஆலயங்களை சுற்றி கோட்டைகள் கட்டப்பட்டிருப் பதை பார்த்து வியந்தார். மாட்டு வண்டியில் சென்னையி லிருந்து திருநெல்வேலி சென்று அங்கு பல இடங்களை பார்த்தார். டோஞவூரில் சில நாட்கள் தங்கினூர்.

ஜாதி வேறுபாடுகள், பிராமணர் மத்தியில் ஐயர், ஐயங்கார் என்ற பிரிவுகள், அடிமைகள் வாழ்க்கை எல்லாம் கண்டு மனம் வருந்தினூர். தாழ்த்தப்பட்ட மக்க ளுக்காகவும் அடிமைகளுக்காகவும் பிற்காலத்தில் ஒரு இயக் கத்தையே ஆரம்பித்தார். திருவனந்தபுரத்தில் வயலில் உழுவதற்கு ஏர்மாடு ஒன்று ஒரு பக்கமும் அடுத்த பக்கம் ஒரு மனிதனும் மாட்டப்பட்டிருப்பதைக் கண்டு துடித் தார். எல்லாம் சுற்றிப்பார்த்து மீண்டும் சென்னை திரும்பினூர்.

சென்னையில் இவர் மேல்பார்வையாளராக இருந்து பணி ஆற்றுவது இவருக்கு விருப்பமில்லை. பல குழுக்கள் கூடுவதும் அதின் பொறுப்புக்களை கவனிப்பதும் தன் அழைப்பு அல்ல என்பதனை உணர்ந்தார்.

தன் நேரத்தை வீணுக்குவதாக அவர் எண்ணினூர். நிலத்தில் விழும் கோதுமை மணியாக இருக்க விரும்பி னூர். மேல் அதிகாரிகளுக்கு விருப்பத்தை தெரிவித் தார். கொஞ்சம் எதிர்ப்பு இருந்தாலும் முடிவில் வெற்றி பெற்று இந்த மாதிரியான வாழ்க்கையிலிருந்து விடுதலை அடைந்தார். மீண்டும் மாட்டு வண்டியில் தெற்கே திரும்பினூர்.

தமிழ் கற்றும் தனக்கு தாராளமாக பேச, வேத வசனங்கள் சொல்ல வரவில்லையே என்று சொல்லி அதற்காக ஜெபித்தார். தமிழ் பேசும் தருணம் தான் செய்த தவறு ஒன்றை அவர் மற்றவரிடம் கூறியிருக்கிறூர்.

''டவலை எடுத்து வா'' என்று தன் வேலைக்காரனிடம் கூற அவன் ''தவளை'' ஒன்று போய் பிடித்து வந்தானும்!

மேல் நாட்டிலிருந்து தனக்கு வரும் பணத்தை வேண்டாமென்று சொல்லி முழுவதுமாக கடவுளை நம்பி வாழ்ந்தார். கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு அவரைப் பற்றி சொல்ல வேண்டும். அதுதான் அவர் குறிக்கோள். இந்த வேலையை ஆர்வத்தோடு ஆரம்பித்தார். இந்திய சகோதரர் சிலர் இவருடன் சேர்ந்து உதவினர். ஆனுல் சில காலத்தில் எதிர்பாராதவிதமாக வியாதிப்பட்டார். அவரை இங்கிலாந்திற்கு அனுப்பிவிட்டனர். வழியெல்லாம் கடவுள் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்.

இங்கிலாந்து சேர்ந்தார். அங்கிருந்த சமயம் தமிழ் திருமறையை நன்ருய் மீண்டும், மீண்டும் வாசித்தார். தன் தமிழ் படிப்பில் அதிகமான முன்னேற்றம் அடைந்தார். வியாதியும் நன்ருகி விட்டது. தன் சொந்தப் பணத்தில் இந்தியா திரும்பினுர். மடோஸ், டேவிட் என்ற மிஷனெரிகள் இவரை துறைமுகத்தில் வந்து சந்தித்தனர்.

மீண்டும் இந்தியாவின் மண்ணில் மிதித்தது அவருக்கு எல்லையில்லா ஆனந்தம். பயங்கரமான பிரயாணம் செய்து திருநெல்வேலி வந்து சேர்ந்தார். பல துன்பங்கள் அடுத்து அடுத்து வந்தன. இவருடன் ஊழியம் செய்ய வந்த மிஷனெரிகள் எவ்ரியும், பரன்புரோக் என்பவர்கள் பிஷபேதியில் மரித்தனர். திகைத்தார் ராக்லண்டு. ஆனுலும் கர்த்தருக்குள் நம்பிக்கை உள்ளவராக துன்பங்களை வரவேற்ருர் 'Be ambitious to suffer' என்ருர்.

தென் இந்தியாவின் உஷ்ணத்தையும், தூசியையும் பொருட்படுத்தாமல் கிராமங்கள் எல்லாம் நேரில் சென்று நற்செய்தி ஊழியம் செய்தார். நூற்றுக்கணக்கான கிராம மக்கள், பட்டண மக்கள் செய்தி கேட்டனர். கிராமத்தாரின் தோளின்மேல் கை போட்டு அன்புடன் பேசினுர். அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

நல்ல ஊழியம் செய்து கொண்டு இருக்கும் சமயம் அவருக்கு கடவுளின் அழைப்பு வந்தது. அவர் கூப்பிடும் சப்தம் கேட்டு ஒரு சிறு பையன் ஜன்னல் வழியாகப் பார்த்தானும். அவர் அமைதியாக உட்கார்ந்து புன்னகையுடன் 'Jesus' என்று சொல்லி மரித்தாராம். அவர் முகத்தில் காணப்பட்ட சாந்தியை கண்ட அந்தப் பையன் பிற்காலத்தில் கிறிஸ்தவனுகி சாட்சி கூறுகிருன். அக்டோபர் மாதம் இருபத்திரண்டாம் தேதி கி.பி. 1858 இல் அவர் மரித்தார்.

சமீபத்தில் ஒரு மாத பத்திரிக்கையை நான் வாசிக்கும் போது ராக்லாண்டு மிஷனெரியைப் பற்றி ஒரு குறிப்பு கண்டேன். மதிப்புக்குரிய திரு. மவுண்ட் பேட்டன் இவர் கல்லறையை தேடி கண்டுபிடித்தாராம், ''பிரபுக்கள் மத்தியில் இருக்கவேண்டிய நீர் இந்த முள்ளுகாட்டில் இருக்கிறீரே'' என்ருராம். யாருக்காக?

எங்கே பிறந்து, என்ன வசதிகளுடன் வாழ்ந்த அவர் ஆண்டவனுக்காக முற்றிலும் துறந்து, ஒரு காட்டில், ஒரு சிறு வீட்டில், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வந்து... அவர் தியாகத்தை கற்பனை பண்ணவும் முடியவில்லையே... நாம்... நாம் என்ன பரிதாபம்!

வில்லியம் கேரி!

வில்லியம் கேரி இங்கிலாந்து தேசத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். குடும்பச் சூழ்நிலையில் படிக்க வசதியற்று சிறு பிராயத்திலேயே படிப்பை நிறுத்தி செருப்பு வியாபாரம் செய்யும் ஒரு முதலாளியிடம் வேலைக்கு அமர்ந்தார். ஆனல் கேரி மனம் தளராமல் தன் வேலைகளின் மத்தியிலும் நேரம் கிடைக்கும் தருண மெல்லாம் பல புத்தகங்களை வாசித்து தன் அறிவை விருத்தி செய்தார். கேரி தம் தொழிற்கூடத்தையே தன் கல்லூரி ஆக்கிவிட்டார் என்று பலர் கூறினர். ஆனல் அவர் தம் வேலை நேரத்தை களவு செய்யவில்லை.

பல மொழிகள் கற்பதில் அதிக ஆர்வமும் திறமையும் அவரிடமிருந்தது. கிரேக்க மொழியின் எழுத்துக்களை ஒரு புத்தகத்திலிருந்து எழுதி ஒரு பெரியவரிடம் தனக்குச் சொல்லி கொடுக்க வேண்டினர். அவரும் இவரின் ஆர்வம் கண்டு உதவினர். அதிவிரைவில் கிரேக்கு மொழியும் பின் எபிரெய மொழியும் கற்ருர்.

தொழிற் கூடத்தில் சிநேகிதர் ஒருவரின் அழைப்பிற்கு இணங்க ஒரு நற்செய்தி கூட்டத்திற்குச் சென்ருர். செய்தி அவர் உள்ளத்தை தொட்டது. தன்னை முற்றிலுமாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார். அவருக்கு வயது பதி னெட்டு. பின் அவர் அந்த 'பாப்டிஸ்ட்' சபையைச் சேர்ந் தார். அங்கு குருவானவரான ஸ்காட் கேரியின் ஆத்துமப் பிரகாரமான வளர்ச்சியைக் கவனித்தார். கேரியும் தன் வளர்ச்சிக்கு காரணம் ஸ்காட்தான் என்று கூறியுள்ளார்.

கேரி வார நாட்கள் எல்லாம் தன் தொழிலை கவனித்து ஞாயிறு நற்செய்தி பணிக்காக செலவிட்டார். சபைகளில் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். எட்டு ஆண்டுகள் இவ்

விதம் ஊழியம் செய்து பின் குருவாக அபிஷேகம் பெற்றூர்.

தன் முதலாளி இறந்துவிடவே தொழிற்கூடத்தின் பொறுப்பை இவர் ஏற்றுக்கொண்டார். முதலாளியின் மனைவியின் தங்கையை மணந்தார். அக்காலத்தில் குருவானவரின் ஆண்டு வருமானமே ரூபாய் இருநூறுக்கு சமமானதால், குடும்பத்தின் நலனுக்காக தன் தொழிலையும் விடவில்லை. தொடர்ந்து செய்தார்.

கூக் என்னும் மாலுமி ஒருவர் உலகத்தின் பல பகுதிகள் சென்று அநேக அறிக்கைகள் வெளியிட்டார். அதனை கண்ணுற்ற கேரிக்கு எத்தனை தேசங்களில் நற்செய்தி அறியாத மக்கள் இருப்பார்கள் என்ற எண்ணம் உதித்தது. தன் எண்ணத்தை சபையில் கூறினூர். எதிர்ப்புகள் பல வந்தன. "கடவுள் அதை பார்த்துக் கொள்வார்" என்று பதிலும் வந்தது. ஆனால் கேரியோ இதை மனதில் வைத்து பல புத்தகங்களை வாசித்து பல புள்ளி விவரங்களை தயாரித்து வந்தார்.

ஆண்டவருக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டுமென்ற தன் தீரா ஆசையை "விசாரணை" என்ற புத்தகத்தின் மூலம் கி.பி. 1792-இல் வெளியிட்டார். "கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார். கடவுளுக்காக அரிய காரியங்களை சாதிக்கப்பார்" என்ற அவருடைய இரத்தின சுருக்கமான அருளுரையை கேட்ட பின் அது அநேகர் மனதில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி மிஷனெரி சங்கமே உருவாவதற்கு காரணமாகிவிட்டது. மற்று பல சங்கங்கள் பண உதவி செய்யவும் முன் வந்தன. இதன் விளைவால் ஜான் தாமஸ்ஸுடன் கேரியும் கி.பி. 1793-இல் கல்கத்தா வந்து சேர்ந்தார்.

இந்தியா வந்து சேர்ந்த கேரியின் குடும்பம் பல துன்பங்களை அனுபவிக்கலாயினர். ஜானுடன் சேர்ந்து கூட்டு குடும்ப வாழ்க்கை நடத்தினூர். ஜான் வரவிற்கு மிஞ்

செலவு செய்யும் இயல்புடையவர். அதனல் பண பற்ருக் குறையால் வாடினர். கேரி கல்கத்தாவின் தென்பாகம் சென்று காட்டு நிலத்தை சரிசெய்து பயிர்வகைகள் செய்தார். பின் கேரி ஒரு தொழிற்சாலையில் வேலையில் அமர்ந்தார். இது தன் நற்செய்தி பணிக்கு உதவும் என்று எண்ணினுர்.

அரிய பல வேலைகளின் மத்தியிலும் கேரி இந்தியா வந்ததிலிருந்து வங்கமொழியை நன்ருய் கற்று திருமறையை மொழிபெயர்த்தார். அதே நேரம் சமஸ்கிருத மொழியும் கற்று வந்தார். இந்தியாவில் நடக்கும் பல பணிபற்றி இங்கிலாந்திற்கு கடிதங்கள் பல எழுதினுர். மக்கள் பலர் மனதில் அது கிரியை செய்தது. சில புது மிஷனெரிகள் இந்தியாவை நோக்கி வந்தனர்.

இந்தியாவில் வியாபாரம் செய்து வந்த கிழக்கு இந்திய கம்பெனி அதிகாரிகள் வந்தவரை கல்கத்தாவில் இறங்க விடாததால் டச்சுகாரருக்கு சொந்தமான செரம்பூர் போய் இறங்கினுர். செரம்பூர் பகுதி நற்செய்தி பணிக்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது என்பதனை கேரி கேள்விப்பட்டு கி.பி. 1800-ம் ஆண்டு அவரும் அங்குபோய் சேர்ந்தார்.

அங்கிருந்த வார்ட், மார்ஷ்மான் இவரை வரவேற்று ஒரே குடும்பமாக, பணத்தை பொதுவாக வைத்து வாழ்ந்தனர். வார்ட் ஒரு சிறு அச்சுக்கூடத்தை ஆரம்பித்து கேரி மொழிபெயர்த்தவற்றை அச்சடித்தார். அங்கு சிறு பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடமும் ஆரம்பித்தனர்.

கல்கத்தா இந்தியாவின் தலைநகராக இருந்தது. அதில் கவர்னர் ஜெனரலான வெல்லெஸ்லி இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயருக்க இந்திய மொழி கற்றுக்கொடுக்க கேரியை தெரிந்தெடுத்து அவருக்கு அழைப்பு விடுத்தார். கேரி, இதன் மூலம் மிஷனெரிமாருக்கு நன்மை பிறக்குமென இதற்கு ஒத்துக்கொண்டார்.

இது இந்தியாவிற்கு மிஷனெரிமார் தடையின்றி வர வழியும் உண்டாக்கியது. தன் வேலை நேரம் தவிர மற்ற நேரங்களை நற்செய்தி பணிக்கும், துண்டு கைத்தாள் பல இடங்களில் கொடுப்பதற்கும் செலவிட்டார். இங்கும் அவர் பல பள்ளிகளை ஆரம்பித்து சிறுவருக்கு கிறிஸ்தவ போதனைகள் நடத்தினர்.

கேரி அவர்களின் போதனையால் முதலாவதாக கிறிஸ் தவ மதத்தைப் பற்றிக்கொண்டவர் கிருஷ்ண பால் என்ற தாழ்த்தப்பட்ட குலத்தை சேர்ந்தவர். பின் அவர் குடும் பத்தினரும், ஒரு சில பிராமணரும் முகமதியரும் கிறிஸ்த வரானவர். இந்த கிருஷ்ணபால் சிறிது காலத்திற்கு பிறகு மரிக்கவே, அவரின் சாவுபெட்டியை கிறிஸ்தவரான பல் வேறு ஜாதியினரும் ஆங்கிலேயரும் தூக்கிச்சென்றனராம். அது புறஜாதியார் மத்தியில் ஒரு பெரிய சவாலாகவும் சாட்சியாகவும் இருந்தது.

சமுக சீர்திருத்தங்களிலும் கேரி அக்கறை காட்டினர். கொடிய பழக்கங்களாகிய 'சக்தி' சிசுக்களை பலியிடுதல் முதலியவற்றை தடுத்தார். இவர் ஒரு இயற்கை ரசிகர். அவர் ஒரு அழகிய தோட்டத்தை தன் இருப்பிடத்தில் உருவாக்கினர். அதனை அனைவரும் கண்டு வியந்தனர்.

கி.பி. 1821-இல் வார்ட், மார்ஷ்மான், கேரி மூவரின் முயற்சியால் செராம்பூரில் ஒரு கல்லூரி துவக்கப்பட்டது. இந்தியரே சுவிசேஷ பணியில் ஈடுபடவேண்டுமெனக் கருதி அவர்களுக்கு இறையியல் அங்கு கற்றுக்கொடுக்கப் பட்டது. நற்செய்தி பணியே உலகில் எல்லா வேலையிலும் சிறந்தது எனக் கருதினர். பர்மாவிற்கு மிஷனெரியாக சென்ற இவர் மகன், அங்கு அரசாங்க பிரதிநிதியான தைக் குறித்து வருந்தினர். பல கடிதங்கள் அவனுக்கு எழுதினர்.

இவ்விதமாக தன்னலமற்று, பிறருக்காக வாழ்ந்த கேரி கி. பி 1834 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஒன்பதாம் தேதி மரித்தார்.

இவரின் சேவைகளை கவனிக்கும்போது ஒரு மனித னால் இது எப்படி சாதிக்க முடியும் என்ற வியப்பு நம் மனதில் தோன்றுகிறது. அவர் சொன்னது போல் ஆண்ட வரிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்த்ததால் தானே, இவரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால் எவ் வளவு தாழ்வாக நாம் காணப்படுகிறோம். சிறு மாத இதழ் வாசிக்கக்கூட நேரமில்லையென்று சொல்லும் நாம் எப்படி பல நூல்கள் வாசிப்பதும், மொழி கற்பதும், மொழிபெயர்ப்பதும் கூடும்?

கேரியின் விடா முயற்சியும், கடவுளை தம்மில் அவர் கொண்ட தளரா நம்பிக்கையும்தானே! நாம் நம் பிள்ளை கள் பெரிய உத்தியோகஸ்தராக இருக்க விரும்புகிறோம். கேரியின் எண்ணம் பாருங்கள். ஆத்துமாக்களின் பேரில் அவருக்கு இருந்த தீராத தாகம்! நம்மால் கற்பனை செய் தும் பார்க்க முடியவில்லையே! கேரி அவர்களின் ஜீவியத்தை முன் மாதிரியாக வைத்து அவரின் அடிச்சுவடுகளில் நடக்க முயல்வோம்.

அத்தியாயம் 12

வீரமாமுனிவர்!

கிறிஸ்துவின் அன்பினால் ஏவப்பட்டு, கடல் கடந்து கிறிஸ்துவின் நற்செய்தியை தமிழ்நாட்டில் பரப்ப வந்த நல்லறிஞரில் பலர் தமிழ்ப்பணியும் செய்துள்ளார்கள். தமிழ் நாட்டிற்கு வந்த அவர்கள் முதலில் தமிழ் மொழியை ஐயமற கற்றனர். மறுநாட்டில் செய்தி சொல் வோரின் மேல் வீழ்ந்த கடமை அதுவென்று உணர்ந்த னர். அதுமட்டுமல்லாமல் அப்பெரியார் பிறமதத்தினரின் நம்பிக்கைகளையும் நன்கு புரிந்துகொண்டால்தான் அவரு டன் உரையாடல் நடத்த முடியும் எனபதனை அறிந்தார். எனவே அவரின் வேதங்களையும் காவியங்களையும் கற்ற னர். இவ்விதமாக தொண்டு ஆற்றியவரில் ஒருவர்தான் வீரமாமுனிவர்.

இத்தாலிய தேசத்தில் ஏறக்குறைய முன்னூறு ஆண்டு களுக்கு முன் பிறந்த பெஸ்கி என்னும் பெயர் கொண்ட இவர், இயேசுநாதர் சங்கத்தை (Society of Jesus) சேர்ந்து துறவறத்தை மேற்கொண்டு தூதுபணியாளராக இந்தியா வந்தார். தமிழ்மக்கள் அவரின் வீரச்செயல்களை யும் உலகபற்று அற்ற வாழ்க்கைகளையும் கண்டு அவர் மேல் கொண்ட அன்பால் அவருக்கு புதுப்பெயர் சூட்டி வீரமாமுனிவர் என்று அழைத்தனர்.

வீரமாமுனிவர், சுப்பிரதீபக் கவிராயரை தம் தமிழ் ஆசிரியராக அமர்த்தினர். திருக்குறள், கம்பராமாயணம், சிந்தாமணி முதலிய நூல்களின் நடை இவரைக் கவர்ந் தது. திருமறை சரித்திரங்களும் இதுபோல் காவியமாக உருவாக்கப்படவேண்டுமென மிகவும் விருப்பம் கொண் டார். அதை செயலில் காட்டினர். தேம்பாவணி பாடாதமாலை என்னும் அருங்காவியத்தை வரைந்தார்.

தமிழ் காவியங்கள் பல வாசித்ததால் தேம்பாவணியில் அந்த நடைகளை புகுத்தினார்.

குன்று போல் நின்ற கோலியாத்தை சிறுவன் தாவீது கர்த்தரின் துணையால் கொன்ற காட்சியை விவரிக்கும் தருணம் தாவீது கல்லை எப்படி சுழற்றினான், எப்படி வீசினான் என்பதை ''மக்கள் அறியும் முன் அந்த வல்லுருவம் மண்ணிடை வீழ்த்தல் கண்டார்'' என வீரமாமுனிவர் 'தேம்பாவணி' இல் எழுதினார். இந்த எண்ணம் அவருக்கு கம்பர், இராமன் எப்படி வில்லை வளைத்தான் என விவரிக்கும் தருணம், ''எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்'' மக்கள் என்னும் பகுதியிலிருந்து வந்தது.

தேம்பாவணியை மதுரை சங்கத்தில் அரங்கேற்றி சங்க புலவர்களும் அதின் நயங்கள் கண்டு முனிவரை பாராட்டினர். மேலும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை கற்று' தொன்னூல் விளக்கம்'' என்ற ஒரு செந்தமிழ் இலக்கணமும் எழுதினார். நகைச்சுவை ததும்பும் ''பரமார்த்தகுரு'' கதையும் இவர் எழுதியதே.

கொள்ளிட நதியின் வடபக்கத்தில் ஏலாக்குறிச்சி என்ற சிற்றூரில் ஒரு பெரிய கிறிஸ்தவ ஆலயத்தை வீரமாமுனிவர் கட்டினார். அந்த ஊரின் பெயரை திருக்காவலூர் என்று மாற்றி அழைத்தார். ''திருக்காவலூர் கலம்பகம்'' என்னும் பிரபந்தமும் பாடினார்.

திருக்காவலூரின் ஆலயத்தை சுற்றியுள்ள சோலையில் புல்லாக நிற்கவும், வண்டாக பாடித்திரியவும் தான் விரும்புவதாக, இவர் பிரபந்தத்தில் கூறினார். அந்த எண்ணமும் ஆழ்வார், திருவேங்கிட மலையில் மரமாக நிற்கவும், படியாக கிடக்கவும், ஆறாக பாயவும், மீனாக திரியவும் விரும்புவதாக கூறினதிலிருந்து பிறந்தது.

திருக்குறளின் பெருமைதனை லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். இவர் தமிழ் அகராதிக்கு தந்தையாக விளங்கினார். அகரம் முதலாக தொகுத்து அதற்கு வரிசை

கிரமமாக பொருள் எழுதினர். பல துறையில் தமிழ் மொழிக்கு தொண்டு ஆற்றினர். தமிழருடன் பழகி அவரில் ஒருவராக விளங்கினர்.

நற்செய்தி பணியாளருக்கு வீரமாமுனிவர் "வேதியர் ஒழுக்கம்" என்னும் நூலை எழுதினர். தரங்கம்பாடியி லுள்ள ஊழியருக்கும் இவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை விளக்க "வேத விளக்கம்" "பேதகம் அறுத்தல்' என்னும் புத்தகங்களை வெளியிட்டார். வாதம் நடத்த வேண்டிய சூழ்நிலை உருவானல் அதை சிறிதும் தளர்ச்சி இல்லாமல் நடத்தி வெற்றி காண்பது இவர் இயல்பு. ஒரு சமயம் ஒன்பது சடை முனிவர்களுடன் இவர் திருக்காவலூரில் பெருவாதம் நடத்தி, வந்தவர் தோற்றனர் என்று சரித்திரம் கூறுகிறது. தோற்றவரில் அறுவர் கிறிஸ்தவ மதத்தை தழுவினராம். மூவர் தம் சடையை அறுத்தெறிந்து சென்றனராம்.

இறையியல் கற்றுக் கொடுப்பதற்காக திருக்காவலூரில் கல்லூரி ஒன்று அமைத்தார். அங்கு தாமே ஆசிரியராக பணியாற்றினர். இறையியல் தவிர, இவர் அங்கு இலக்கணமும் போதித்தார்.

வீரமாமுனிவர் இவ்வாறு புகுந்த நாட்டு மக்களின் மொழியும் கற்று, புறமதத்தவரின் நம்பிக்கையும் புரிந்து அவரோடு இணைந்து அதே நேரம் தம் சாதனைகளையும் சாதித்தார். இன்றும் தமிழக அரசு அவருக்கு சிலை யெடுத்து அவரைப் பாராட்டுகிறதென்றால் அவர் பெருமை கூறவும் முடியுமா?

"உரையாடல் பல தரப்பட்ட நம்பிக்கையும் கொள்கை களும் உள்ள நம் அயலகத்தாரின் எண்ணங்களை அழிப்ப தற்கு அல்ல. ஆனல் அதில் பங்கு கொள்வோரின் தனித் தன்மையில் ஒருவர் மேல் ஒருவருக்கு உள்ள நம்பிக்கையை யும், மரியாதையையும் அடிப்படையால் கொண்டுள்ளது" என்ற அகில உலக திருச்சபை கவுன்சில் கூறுவது வீரமா முனிவர் வாழ்க்கையில் எவ்வளவு பொருத்தமாகும்.

அத்தியாயம் 13

பேராயர் அசரியா!

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளாளன் விளை சபையின் உபதேசியாராகவும், பின் குருவானவராக வும் பணியாற்றி வந்த வேதநாயகத்திற்கும், அவர் மனைவி ஹெலன் அம்மையாருக்கும் பிறந்த தவப்புதல்வன்தான் பேராயர் அசரியா. அன்னாள் போல் தனக்கு ஒரு குமாரனை அளிக்கும்படி ஆண்டவனிடம் வேண்டி, ஜெபத்தில் கிடைத்த அப்பிள்ளைக்கு சாமுவேல் அசரியா என்று பெய ரும் வைத்து கர்த்தருக்கே அர்ப்பணித்தார். தன் தாய் தனக்காக ஜெபத்தில் தரித்திருப்பதும், பிற்காலத்தில்தான் ஆண்டவனிடம் ஊழியக்காரர் ஆகவேண்டுமென்பதும் சின்னஞ்சிறு பாலகனை அவர் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது

வெள்ளாளன்விளை கிராமத்திலும், பின் மெஞ்ஞான புரம் பள்ளியிலும் படித்து சிறந்த மாணவனாக விளங்கி னார். அசரியா தந்தை வேதநாயகம் மரித்த பின், தாய் வேலை செய்து தன் மகனை திருநெல்வேலி கல்லூரியில் படிக்க வைத்தார். கல்லூரி மாணவர் மத்தியில் கிறிஸ்தவ பண்பும், பக்தியும் அவ்வளவு இல்லாதது கண்டு அசரியா அவர்களுக்கு ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்தார்.

அங்கு படிப்பு முடிந்த பின், சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் சேர்ந்து கற்றார். வாலிபர் மத்தியில் பல பணி யில் ஈடுபட்டிருந்ததால் படிப்பு முடிந்தவுடன் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தில் (YMCA)வேலை செய்ய அழைக்கப் பட்டார். ஒரே ஆண்டில் செயலாளராகவும் மாற்றப் பட்டார் வாலிபர் மத்தியில் பல மகத்தான சேவை புரிந்தார். தாய் அனைத்தும் கண்டு பெருமிதமடைந்தார்.

நற்குணங்களுக்கும், பண்பிற்கும் இருப்பிடமான அன்பு மரியாளை தன் மகனுக்கு வாழ்க்கைத் துணைவியாக

தெரிந்தெடுத்தார். அன்பு மரியாளின் தாயார், சாராள் டக்கர் பெண்கள் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அசரியா அவர்களும் அன்பும் மனமொத்த வாழ்க்கை நடத்தினர்.

கிறிஸ்தவ வாலிபர் சங்கத்திற்காக சுற்றியலைந்து கவனத்துடன் ஊழியம் செய்தாலும், அவர் மனதின் ஆழத்தில் மிஷனெரி பாரம் அழுத்தியது. தான் வளர்ந்த ஊராகிய மெஞ்ஞானபுரம் போகும் நேரம், பனங்காட்டின் மத்தியில் சென்று கதறி அழுது ''ஆண்டவரே இந்தியரை மீட்டருளும், ஊழியரை எழுப்பும். ஊழியம் செய்ய வழி காட்டும்'' என்று மன்றாடி ஜெபிப்பாராம். தன் மனைவியிடம் மட்டும் தன் உள்ளத்தின் பாரத்தையும், கவலையையும் சொல்லி ஜெபிக்கச் சொல்வாராம்.

சங்கத்தின் வேலையாக அசரியா அவர்கள் யாழ்பாணம் சென்றார். அங்குள்ள வாலிபர், ஒரு மிஷனெரி சங்கத்தை ஆரம்பித்து சுதேச மிஷனெரிமாரை பல இடங்களுக்கு அனுப்புவது கண்டு வியந்தார், கர்த்தரை துதித்தார். திருநெல்வேலியிலும் அப்படி எழுப்புதல் வேண்டுமென யாழ்பாண கடற்கரையில் முழங்காலில் நின்று ஜெபித்தார், தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். அவரின் ஜெபமும், இடைவிடாத முயற்சியும் வீண்போகவில்லை. கூடிய சீக்கிரம் திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம் (IMS) கி.பி 1903ல் நிறுவப்பட்டது அறிக்கையை அசரியா அவர்கள் வாசித்தனர்.

தன் வேலையை முற்றிலும் அறிக்கையில் மறைத்து வைத்தும், அங்கத்தினர் அவரையே முதல் செயலாளராக தெரிந்தெடுத்தனர். சங்கத்தை பற்றிய காரியங்கள் அனைத்தும் தீர்மானிக்கப்பட்டது கி.பி 1904இல் திரு பாக்கியநாதன் முதல் மிஷனெரியாக தெரிந்தெடுக்கப்பட்டு பணித்தளத்திற்கு அனுப்பப்பட்டார். ஜெபிக்கவும் நிதிபொருள் திரட்டவும் ''உழைப்போர் ஐக்கியம்'' என்ற ஒரு இயக்

கத்தை அசரியா அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இதின் மூலம்தான் விற்பனை விழா ஆரம்பமானது.

கோயம்புத்தூரில் கூட்டங்கள் நடத்தி மிஷனெரி ஊழியத்திற்கு ஒப்புக் கொடுக்க மக்களை அறைகூவி அழைக்கும் தருணம் ஏன் தானும் ஒரு பணிதளத்திற்கு போகக்கூடாது என்ற எண்ணம் வரவே, தோர்ணக்கல் செல்ல தீர்மானித்தார். அன்பு அம்மாளும் அதற்கு சம்மதித்து கர்த்தருக்கு துதி செலுத்தினர். வாலிபர் சங்கம், இந்திய மிஷனெரி சங்கம், தேசீய மிஷனெரி சங்கம் எல்லாம் தங்களை விட்டுப் போகிறாரே என்று வருந்தினர்.

தோர்ணக்கல் போகும் முன் அவருக்கு உதவி குரு பட்டம் கொடுக்க விரும்பி மிஷனெரி ஒயிட்ஹெட் அவருக்கு பாடம் கற்பித்து கிபி 1909 ஜான் 29-ம் தேதி அவருக்கு பட்டமளித்தார். சிறிது காலத்தில் முழுபட்டமும் பெற்றார். பின் தோர்ணக்கல் சென்று குடிசையிலும், கூடாரத்திலும் தங்கி தெலுங்கு மொழி கற்றார்.

இங்கிலாந்தில் கி பி 1910-ம் ஆண்டு நடந்த சர்வதேச மிஷனெரி சங்கத்திற்கு அசரியா ஐயர் அவர்களை வரும்படி அழைத்தனர். அவரும் அதனை ஏற்று எடின்பரோ சென்றார். மேனாட்டினர் கீழ் நாட்டவரை அதிக அற்பமாக மதித்த காலம். அசரியா ஐயர் அவர்களின் உள்ளம் குமுறியது. இந்த பிளவை உணர்த்தி கண்டிப்பாக பேசினார்.

பரலோகத்தில் பொன்னாசனங்களில் வீற்றிருக்க அழைப்பு கொடுக்கும் மிஷனெரிமார்கள் இங்கு அவர்கள் வீட்டின் தாழ்வாரத்திலிருக்கும் பிரம்பு நாற்காலியில் உட்கார இந்தியரை அனுமதிக்காதது ஏன்? என்று சுட்டிக் காட்டினார்கள். பலர் பாராட்டினர்; சிலர் வெறுத்தனர். பல இடங்கள் சுற்றிப் பார்த்து தாயகம் திரும்பினார்.

பேராயர் ஒயிட்ஹெட் வித்தியாசம் காட்டும் மனப்பான்மை உள்ளவர் அல்ல, அவருக்கு அசரியா ஐயர்மேல் ஒரு தனி அபிமானம்! அவரை தனக்கு உதவி பேராயராக எடுக்க நினைத்தார். எதிர்ப்புகள் குவிந்தன. ஒரு இந்திய

பேராயரின் கீழ் வேலை செய்ய விரும்பாத பல ஆங்கிலேய ஆயர்களும், பொறுமையால் இந்தியரும் கடுமையாக வாதாடினர்.

அசரியா ஐயரவர்கள் கடவுள் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்த அம்மாவும் அவரும் முழங்காலில் நின்றனர். ஆண்டவரின் சித்தப்படி கி பி 1912 இல் டிசம்பர் 29-ம் தேதி கல்கத்தாவில் அதிக சிறப்பாக இந்த அபிஷேக ஆராதனை பல பேராயர்கள் சூழ நடந்தது.

தோர்ணக்கல் பகுதியில் ஊழியம் வல்லமையாக நடந்தது. அதை சுற்றியுள்ள பல கிராமங்களிலும் மிஷனுக்கு சொந்தமான நிலங்களை வாங்கினர். ஊழியருக்கு வீடுகளும், ஆராதனைக்கு கோவில்களும் கட்டினர். புதிதாக கிறிஸ்தவரான எளிய மக்கள் புறஜாதியாரால் துன்பம் அடைந்த வேளை அவர்கள் இன்னலை அசரியா அவர்களை துடைத்தார்.

திருச்சபை வளர்ந்து பெருகிற்று. அநேகர் திருமுழுக்கு பெற்றனர். பந்தம்பல்லி, நாகாரம், சங்கீசு, திருமலைப் பாளையம், கொருவி, ராவிராலா என்றும் பல கிராமங்களில் சேவை நடந்தது. பள்ளிகளும், மருத்துவமனைகளும், எழும்பின. இறையியல் கல்விக்காக கல்லூரி கட்டப்பட்டது. கி பி 1925 இல் 90 தெலுங்கு குருவானவர் ஊழியத்தில் இருந்தனர். பலவிதமான ஜாதியினரும் லம்பாடி போன்ற குழுவினரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

அசரியா அவர்களின் வாழ்க்கை மக்கள் மனதைக் கவர்ந்தது. மக்கள் "தன்ரிகாரு" (தந்தை) என்று அன்புடன் அவரை அழைத்தனர். மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பம் கண்டு புறஜாதியரும் வியந்தனர். கிறிஸ்தவ மதத்திற்கு மரியாதை செலுத்தினர்.

இந்திய முறை, வழக்கம், பண்பாடு பேராயர் அசரியாவை விட்டுப் பிரியவில்லை தோர்ணக்கல்லில் கட்டப்பட்ட தேவாலயம் அந்த முறையில் எழும்பியது. ஆலய முகப்புகளில் கோபுரம், தூண்கள் தாங்கின. அவற்றில்

வாழைப்பூ, தாமரைப்பூ சிலுவை உருவங்கள் செதுக்கப் பட்டன. தரையில் உட்கார்ந்து தெலுங்கு கீர்த்தனைகள் பாடினர். காணிக்கை படைப்பு, சேகரிப்பு இல்லே. வெளி நாட்டுப் பணத்திலல்ல, இந்திய பணத்திலேயே கட்டப் பட வேண்டுமென அநேக ஆண்டுகள் செலவிட்டார், கட்டி முடித்தார்.

பேராயர் அசரியா அவர்களுக்கு நான்கு மகன்களும் இரண்டு மகள்களும் இருந்தனர். தம் மக்களே அவர் பக்தி யில் வளர்த்தார் பேராயர் பிள்ளேகள் என்பதால் அவர் களுக்கு பணம் படைத்தவர்களிடம் பெண் தேடாமல் தன் மூன்று மகன்களுக்கும் தன்னிடம் ஊழியம் செய்தவர் களிடம் பெண் எடுத்தார்.

ஒரு மகள் ஒரு குருவானவரை மணந்தார். ஒரு மகள் ஊழியத்திலேயே இறங்கி விட்டார். என்ன முன்மாதிரி யான குடும்பம்! பேராயர் அசரியா தன் வாழ்க்கையின் முடிவுவரை ஆண்டவருக்காக உழைத்தார். உடல் பெல வீனத்தோடு மாட்டு வண்டியில் பல இடங்கள் சுற்றி டிசம்பர் 28ம் தேதி வீடு திரும்பினர். டிசம்பர் 31ம் தேதி கி.பி. 1944 தன் முடிவு சமீபமாவதை உணர்ந்தார். அனே வரிடமும் சிரித்து பேசி ஆண்டவரின் திருமார்பில் சாய்ந் தார். அவர் முகம் பிரகாசமாக இருந்ததாம்.

சமீபத்தில் பேராயர் அசரியாவின் உறவினர் ஒரு வரை சந்தித்தேன். அவர் டெல்லியில் பெரிய வேலேயில் இருக்கிறர். அவர் சொன்னது ''அவர் கருப்பாக இருந் தாலும் அவர் ஒரு பிரகாசம்'' ஆம் சுவிசேஷகனுடைய பாதங்களே அழகாக இருக்கும் என்று வேதம் சொல்லும் போது அவர் முகம் பிரகாசிப்பதில் ஆச்சரியமில்லேயே!

எப்படிப்பட்ட தியாக வாழ்க்கை! நற்செய்தி பணிக் காக எப்படிப்பட்ட பாரம். பனங்காட்டிலும் கடல் கரை யிலும் கண்ணீர் விட்டு ஜெபம். நாம் எப்பொழுதாவது பாரத்தோடு நம் தேசம் நற்செய்தியை அறிய ஜெபிக்கின் ருேமா? தனித்தவராக பேராயர் அசரியா எவ்வளவு சாதித்தார். ஜெபமே ஜெயம் என்று அறிந்தார் இன்றும் நம்மோடு பேசுகிருர். நாமும் செவி சாய்ப்போம்.

மனம்விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாக உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

இந்தப் புத்தகத்தில் சகோதரி ஜாஸ்மின் பால்ராஜ் அவர்கள் ஊழியத்தின் பாதையில் நடந்த பல பரிசுத்தவான்களின் வாழ்க்கை வரலாற்றை தொகுத்து கொடுத்திருக்கிறார்கள். இந்தப் புத்தகம் நிச்சயமாகவே உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தை வெளியிட நினைத்தபோது ஒரு அருமை சகோதரன் இந்தப் புத்தகத்தை வெளியிடும் செலவை மகிழ்ச்சியோடு கொடுக்க முன் வந்தார். அவருடைய தியாகமான உதவியினால் இந்தப் புத்தகம் வெளியிடப்பட ஏதுவாயிற்று. கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

Mr. A. E. Packianathan.
Witten, Germany.

இந்தப் புத்தகத்தை வாசிக்கிற நீங்கள் ஒரு வேளை அன்றன்றுள்ள அப்பம் வாசகராக இல்லாதிருந்தால் தயவு செய்து உடனே உங்களுடைய முழு முகவரியையும் எங்களுக்கு எழுதுங்கள்.

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது ஐம்பது பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்.

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.